முரசொலி

ஆசிரியர்: மு. கருணாநிதி

முரசு: 6 | 19-6-59 | வெள்ளி | ஒலி: 9

கப்பல் கவிழ்கிறது--கட்டுமரம் கரை சேருமா ?



மசானி, ரங்கா, முதலியவர்களை இணைத்துக்கொண்டு காங்கிரசிலிருந்து பிரிந்து சுதந்திரக் கட்சி ஆரம்பித்துள்ள ஆச்சாரியாரின் போக்கைக் கண்ட அறிஞர் அண்ணா "கட்டுமரம் கரை சேருமோ என்னவோ தெ[illegible]து. காங்[illegible]

40. பல்துறை மேதை லியோனர்டோ

அன்புள்ள மாதவி,

பதினைந்தாம் நூற்றாண்டின் ஆரம்பக் காலம் கலையும் காவியமும், விஞ்ஞானமும் கணிதமும் வளர்வதற்கு ஏற்ற சூழ்நிலைகளைப் பெற்றிருந்தது. போர்க்களத்தையே பொழுது போக்கிடமாகக் கொண்டிருந்த பேரரசர்களும் சிற்றரசர்களும் அமைதியை வளர்த்து, தங்கள் கவனத்தைக் கல்வியின்பாலும் கலையின்பாலும் திருப்பினர். அரசர்களின் அரவணைப்பிலே இவைகள் வளர்ந்து செழித்தன. பதினைந்தாம் நூற்றாண்டில் கலையும் இலக்கியமும், அறிவியலும், கணிதமும் தங்கள் பொற்காலத்தின் வருகையை ஆவலோடு எதிர்நோக்கின. இந்தப் பொற்காலத்தின் விடிவெள்ளியாய்த்தோன்றி, ஒப்பாரும் மிக்காரும் இன்றி, பல துறைகளிலும் தனது மேதா விலாசத்தைக் காட்டி மானிட ஜாதியையே தனது அறிவால் பிரமிக்கவைத்தவன் லியோனர்டோ!

இத்தாலி நாட்டில் ஃபிலாரன்ஸ் நகருக்கருகிலுள்ள வின்சி (Vinci) என்ற ஊரில் 1452—ம் ஆண்டில் லியோனர்டோ பிறந்தான். அவனுடைய தந்தை ஒரு வக்கீல் குமாஸ்தா. தந்தைக்கு சட்டபூர்வமான குழந்தையல்ல லியோனர்டோ. வேறொரு பெண்ணுக்கும் தனக்கும் பிறந்த அந்தக் குழந்தையிடம் உண்மையான அன்பைச் சொரிந்தான் லியோனர்டோவின் தந்தை.

சிறுவயதிலே இசையிலும் ஓவியத்திலும் மிக்க ஈடுபாடு கொண்டவனாக லியோனர்டோ விளங்கினான். மகனின் கலையார்வத்தைக் கண்ட தந்தை, தன்னுடைய நெருங்கிய நண்பனான வெரோக்கி (Verrocchi) என்ற ஓவியக் கலைஞனிடம் அவனை மாணாக்கனாக அமர்த்தி ஓவியத்தில் பயிற்சி பெறச் செய்தான். ஏழு ஆண்டுகள் வெரோக்கியிடம் கலைபயின்ற லியோனர்டோ, குருவின் கலைஞானம் அத்தனையும் பெற்று, அவரையும் மிஞ்சிவிடும் நிலையையும் அடைந்தான். இருபத்தொரு பிராயத்தை எட்டிப் பிடிப்பதற்குள்ளாகவே, ஃபிலாரன்ஸ் நகரின் தலைசிறந்த ஓவியக் கலைஞர்களுள் ஒருவன் என லியோனர்டோ செல்வாக்குப் பெற்றான்.

வெறும் ஓவியக் கலைஞனாக மட்டும் லியோனர்டோ விளங்கியிருந்தால் உலக வரலாற்றில் செல்வாக்கான இடத்தைப் பெற்றிருக்கமாட்டான்! கற்பனை வளம் படைத்த லியோனர்டோவின் மூளை ஓவியக் கலையால் மட்டும் திருப்தியடைவதாக இல்லை. சிற்பம், விஞ்ஞானம். கணிதம், இலக்கியம், பொறியியல், நிர்வாகம் ஆகிய எல்லாத் துறைகளிலும் லியோனர்டோவின் அறிவு ஒளிவிட்டுப் பிரகாசித்தது.

அவன் கற்பனைத் திறனால் உருவாக்கப்பட்ட இயந்திரங்கள் பல. அவனுடைய பொறியியல் அறிவால் வெட்டப்பட்ட கால்வாய்களும், அவைகளைக் கடக்கக் கட்டப்பட்ட பாலங்களும் ஏராளம்!

அவனுடைய திறமைதனை உணர்ந்து அவனுக்கு ஆதரவளிக்க ஃபிலாரன்ஸ் நகரைப் பரிபாலனம் செய்த தலைவன் முன்வரவில்லை. மிலான் பிரபுவின் உதவியை நாடினான். அவனுடைய ஆதரவு கிடைத்தது. லியோனர்டோவின் திறமை செயல்படுவதற்கு வாய்ப்புக் கிட்டியது.

மிலான் பிரபுவின் முன்னோர் ஒருவருடைய உருவை, செப்புச் சிலையாக வடிக்கும் பணி லியோனர்டோவிடம் ஒப்படைக்கப்பட்டது. பல்லாண்டுகள் அயராது உழைத்து அதற்கான மாதிரி ஒன்றை அமைத்தான். உருவம் செம்மையாக அமைய உடற்கூறுபற்றிய நூல்களை ஏராளமாகப் படித்தான். இருபத்தாறு அடி உயரமுள்ள மாதிரி உருவத்தை (Model) செய்து முடித்தான் லியோனர்டோ. உருவின் அளவையும் அது அமைக்கப்பட்டிருக்கும் கலை நுணுக்கத்தையும் கண்டு கலைஞர்கள் பிரமித்தனர்.

ஆனால், அந்த உருவம் செம்பினால் சிலையாகவடிக்கப்படவில்லை. இடையில் இத்தாலியின் சிறு நாடுகளுக்கிடையே ஏற்பட்ட போரொன்றில் அந்த மாதிரிச் சிலை உடைத்து நாசமாக்கப்பட்டுவிட்டது!

மிலான் நகரில் கொடிய 'பிலேக்' நோய் பரவி ஏராளமான மக்களைக் காவு கொண்டது. சுகாதார வசதிக் குறைவே நோய் பரவக் காரணம் என்பதைக் கண்டறிந்த லியோனர்டோ, நகரைப் புனர்நிர்மாணம் செய்யும் பணியில் ஈடுபட்டான். மிலான், நவீன வசதிகள் மிக்க நகரமாக உருப்பெற்றது. 1494-ஆம் ஆண்டு லியோனர்டோவின் வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க ஆண்டு. ஏனெனில் ஓவியக் கலையின் உன்னதப் படைப்பு எனக் கருதப்படும் "கடைசி இராச் சாப்பாடு" (The Last Supper) என்ற ஓவியத்தைக் கிறித்தவ மடமொன்றில் அந்த ஆண்டில் தான் லியோனர்டோ தீட்டி முடித்தான். நான்காண்டுகளின் கடுமையான உழைப்புக்குப் பின் அந்த ஓவியம் உருப்பெற்றது. பௌத்தக் கலையின் மகோன்னதப் படைப்பாகக் கருதப்படும் அஜந்தா ஓவியங்கள் காலத்தின் சக்தியால் கலையழகு சிதைந்தது போல், "கடைசி இராச் சாப்பாடு"ம், வண்ணம் கலைந்த நிலையிலேயே உள்ளது. ஓவியத்தின் அழகு குன்றாமல் காப்பதற்குச் செய்யப்பட்ட முயற்சிகள் முழு அளவில் பயனளிக்கவில்லை. இருந்தபோதிலும், கலைந்தும் கலையாமலும் இன்றும் காட்சி தரும் அந்த ஓவியம், ஓவியக் கலைக்கோர் மகுடமாய்—லியோனர்டோவின் கலைத் திறனுக்கோர் எடுத்துக் காட்டாய்த் திகழ்கிறது. இயேசுநாதர் சிலுவையில் அறையப்படுமுன், கடைசி இரவில் தனது சீடர்களுடன் உணவருந்தும் காட்சியைச் சித்தரிப்பதே அந்தப் படம்!

ஓவியக் கலையில் ஊறித் திளைத்த உள்ளம், கணிதத்தின்பாலும் கவனத்தைத் திருப்பியது. நண்பரொருவரின் உதவியுடன் கணித நூல் ஒன்றினை லியோனர்டோ எழுதி முடித்தான். வெனிஸ் நகருக்குச் சென்று அங்கிருந்த நூல் நிலையத்திலுள்ள கணித நூற்களை யெல்லாம் கற்றுத் தேர்ந்தான். கடல் அலைகளின் ஆற்றலைப் பயன்படுத்தி இயந்திரங்களை இயக்க முடியும் என்ற உண்மையையும் கண்டறிந்தான்.

இத்தாலி நாட்டின் மிக விரிவான தேசப் படமொன்றை வரையும் முயற்சியில் ஈடுபட்டான். இம்மாதிரி வேறு வேலைகளில் ஈடுபட்டபோதும் ஓவியக் கலையில் கொண்டிருந்த ஊக்கத்தை லியோனர்டோ கைவிடவில்லை. 'லேடிலிஸா' என்ற ஒப்புயர்வற்ற உயிர்ச் சித்திரம் ஒன்றைத் தீட்டி முடித்தான். லிஸாவின் உதட்டில் லியோனர்டோ நெளியவிட்ட அந்த வசிகரப் புன்னகை, இன்றைக்கும் அந்த ஓவியத்தைக் காணும் மக்களையெல்லாம் மெய்மறக்கச் செய்கிறது. 'லேடிலிஸா'வின் ஓவியத்தைக் கண்டு ரசித்த பிரஞ்சு மன்னன் அதை விலை கொடுத்து வாங்கிப் போய் அரண்மனையை அழகுபடுத்தினான். இன்றைக்கும் பாரிஸ் நகரிலுள்ள கண்காட்சி சாலையில் லியோனர்டோவின் அமரப் படைப்பான 'லிஸா' தனது புன்னகையால் போவோர் வருவோரைப் பரவசப்படுத்திக்கொண்டிருக்கிறாள். பிரஞ்சு மன்னன் லியோனர்டோவின் • பெருமையினை அறிந்து, பாரிஸ் நகருக்கு அவனை யழைத்து தனது ஆதரவில் வைத்துக் கொண்டான். 1519–ம் ஆண்டில், தன்னுடைய அறுபதாவது வயதில், பல்கலை மேதை லியோனர்டோ காலமானான்,

லியோனர்டோ ஒரு கலைஞன்; எழுத்தாளன்; உடற் கூறு கற்றவன்; பொறியியல் நிபுணன்; பறப்பதற்கான கருவியினைக் கண்டு பிடிக்க 16-ம் நூற்றாண்டிலேயே முயன்றவன். பெட்ரோல்போன்ற சக்தியை யளிக்கக்கூடிய சாதனம் அந்தக் காலத்திலேயே இருந்திருந்தால், பறக்கும் கருவியினைக் கண்டு பிடிப்பதில் லியோனர்டோ வெற்றியடைந்திருப்

[தொடர்ச்சி பக்கம்—12[

வருந்துகிறோம்

தி. மு. கழக முன்னணி வீரர்களில் ஒருவரான அருப்புக்கோட்டை, கவிஞர் எம். எஸ். ராமசாமி அவர்களது அருமைத் தாயார் 8—6—59 அன்று இயற்கையெய்தினார் என்ற செய்தி கேட்டு மிகவும் வருந்துகிறோம். அன்னையைப் பிரிந்து துயருற்றிருக்கும் எம். எஸ். இராமசாமி அவர்கட்கும், அவரது குடும்பத்தினருக்கும் நமது அனுதாபத்தையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

எங்கும் — எதிலும் — சமத்துவம்!

வெள்ளி 19—6—59 சென்னை

பிரயாண வரி!

சென்னைக்கு வந்து செல்லும் பிரயாணிகள்மீது மாநகராட்சி வரி விதிக்கப்போகிறது என்கிற யோசனையை மட்டும் வைத்துக் கொண்டு; அந்தப் பிரயாண வரி எத்தகையது; அது யார் யாரைப் பாதிக்கும்; எந்தெந்த நிலையில் அமுலாக்கப்பட இருக்கிறது என்பதையெல்லாம் புரிந்து கொள்ளாமல் இன்று நாடெங்கும் புயல் வேகத்திலே எதிர்ப் பிரச்சாரம் நடந்த வண்ணம் இருக்கிறது.

பசியே இல்லாத வயிறு எப்படிச் சாத்தியமில்லையோ, அது போலவே வரியே விதிக்காத எந்த ஆட்சியும் இருக்கவே முடியாது. அதுபோலவே எல்லா வரிகளையும் எதிர்க்க வேண்டுமென்பது மட்டுமே மக்கள் மன்றத்தின் குறிக்கோளும் அல்ல.

ஒரு குறிப்பிட்ட வரி வரவேற்கக் கூடியது; அன்றி எதிர்க்கக் கூடியது என்று எவ்வாறு கண்டறிவது?

பசிகாரன் பிரயாணம் செய்து கொண்டிருக்கிறான்; இலைகளுக்குப் பதிலாக காய்களாகத் தொங்கும் மாமரத்தைப் பார்க்கிறான்; அதுபோலவே நீண்டு வளர்ந்த கீரைச் செடியையும் காண்கிறான்.

பசிகாரன் நூற்றுக்கணக்கான அந்தக் கனிகளிலிருந்து ஒன்றைப்பறித்து சமைத்துச் சாப்பிடவும் முடியும்; அதுபோலவே கீரைத் தண்டைப் பிடுங்கி, கறியில்லாத குறையைப் போக்கவும்முடியும்!

ஆனால் இவற்றுள் எது சிறந்தது என்கிற கேள்வி பிறக்கும்போது ஒரு மாங்கனியைக் கவர்வதால் மாமரம் படப்போவதில்லை; ஆனால் கீரைத்தண்டோ அப்படியல்ல; எனவே முன்னதுதான் சிறந்தது என்று பதில் தருவோம்.

வரி விதிப்பிலும் இதே நிலைதான்! ஏழையின் கூரையைப் பிய்த்தெறிவதைவிட அதிகம் படைத்தவர்களிடமிருந்து ஒரு சில பெறுவதை யாரும் எதிர்க்க மாட்டார்கள்.

ஆக, வரி விதிப்பிலே முக்கியமாகக் கவனிக்க வேண்டியது வசதியுள்ளவர்களிடமிருந்து பெறுகிறோமா; அல்லது வறுமையாளர்களிடமிருந்து பெறுகிறோமா என்பதுதான்!

வசதியுள்ளவர்களிடமிருந்து பெறப்படுகிற வரியை தி. மு. கழகமோ அல்லது இந்த நாட்டிலுள்ள எந்த முற்போக்குக் கட்சியோ எதிர்ப்பது கிடையாது. உதாரணமாக, ஏழை நடுத்தர வியாபார வர்க்கத்தினரைப் பாதிக்கும் அழுகும் பொருள்களின்மீது விதிக்கப்பட்ட விற்பனை வரியை எதிர்த்த நாம்; முன்பு ஆச்சாரியார் வசதியுள்ளோர் உபயோகிக்கிற பெட்ரோல்மீது போட்ட வரியை எதிர்க்கவில்லை.

இந்தப் பின்னணியில் பார்க்கும்போது சென்னை மாநகராட்சி போட உத்தேசித்திருக்கிற பிரயாண வரி யாரைப் பாதிக்கிறது?

150 மைலுக்கு மேல், ஐந்து ரூபாய் கொடுத்துப் பிரயாணம் செய்பவர்களிடமிருந்து ஓரணா பெறுவதுதான் மாநகராட்சியின் விருப்பம்!

— இந்த வரி யாரை பாதிக்கும்? **150**-மைல் தாண்டி சென்னைக்கு வரக்கூடியவர்களில் பெரும்பாலோர் யார்?

ஏழை எளியவர்களா? அல்ல. அவர்கள் எப்போதோ ஒரு முறை மிகவும் அவசியமான காரணத்தை முன்னிட்டு மட்டுமே பிரயாணம் செய்கிறவர்கள்!

அதிலும் ஐந்து ரூபாய்க்கு ஒரு அணா—என்பது மிகப் பெரிய தொகை அல்ல.

ஐந்து ரூபாய் செலவழிக்க முன்வந்திருப்பவர்கள் அதற்குப் பின் ஒரு அணா செலவழிப்பதற்காக நிச்சயம் தயங்க மாட்டார்கள்.

யாரைப் பாதிக்கிறது; எப்போது பாதிக்கிறது; எப்படிப் பாதிக்கிறது—என்பதை நோக்கும்போது; எப்படியும் வரி விதித்தால்தான் அதிக வருமானம் பெற முடியும் என்கிற நெருக்கடி ஏற்படும்போது; முன்பே இந்தியப் பாராளுமன்றத்தில் நிறைவேறியுள்ள பிரயாண வரி விதிப்பை அமுலுக்குக் கொண்டு வரலாமென சென்னை நகராட்சியினர் யோசிக்கின்றனர்.

மேலும் இந்த வரி திடீரென்று இப்போது முளைத்தது அல்ல; இன்றும் குடந்தை, ஸ்ரீரங்கம், காஞ்சி, மதுரை—போன்ற 'திருத்தல'ங்களில் உற்சவ காலங்களில் பிரயாணம் செய்கிறவர்கள் 'யாத்திரை வரி' கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

இந்த வரியை முதலில் கண்டுபிடித்தவர்கள் யார்? இந்தக் காங்கிரஸ்காரர்கள்தான்!

10—7—1956—அன்றே மாநகராட்சி சென்னையை பிரயாணிகள் நாடுகின்ற ஒரு இடமாகப் பிரகடனம் செய்து; தலைநகரில் வந்திறங்கும் பிரயாணிகள்மீது வரி விதிக்கும் உரிமையை வழங்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறது.

அதற்கு அந்தக் காலத்துக் காங்கிரஸ் காட்டிய காரணம் என்ன?

"சென்னையில் புராதனப் பெருமை கொண்ட பல கோவில்கள் இருக்கின்றன. உதாரணமாக, மைலாப்பூரில் உள்ள கபாலீசுரர் கோயில், கேசவப் பெருமாள் கோயில், கோடம்பாக்கத்திலுள்ள வடபழனி ஆண்டவர் கோயில், திருவல்லிக்கேணியில் உள்ள பார்த்தசாரதி கோவில், பூங்கா நகரில் உள்ள கந்தசாமி கோவில், சென்னைக்கு அருகில் உள்ள திருவேற்றீஸ்வரர் கோயில்—இவைகளின் காரணமாக சென்னை ஒரு க்ஷேத்திரமாக விளங்குகிறது. அது தவிர வட இந்திய க்ஷேத்ரங்களுக்குப் போகிற யாத்ரீகர்கள் சென்னைக்கு வந்துதான் போகின்றனர்!"

— இப்படியெல்லாம் மனசாட்சியை விற்று தமிழகத்தின் தலைநகராம் சென்னையை ஒரு க்ஷேத்திரமென்று வெட்கமின்றிக் கூறி யாத்திரை வரி விதிப்பதற்காக பழைய காங்கிரஸ்காரர்கள் வெட்கத்தை விட்டுக் கோரியிருக்கிறார்கள்.

—ஆனால் தி. மு. கழகம் இப்படியெல்லாம் பொய் கூறி பிரயாண வரி விதிக்க வேண்டுமென்று கூறவில்லை.

"இன்னும் சொல்லப்போனால், பிரயாண வரி இன்னும் போடப்படவே இல்லை. மாநகராட்சியிலுள்ள எல்லாக் கட்சித் தலைவர்களும் இந்த வரியை ஒப்புக்கொண்டால்தான் இந்த வரி வரும். இதற்கென அமைக்கப்பட்டுள்ள குழுவில், மாநகராட்சியிலுள்ள அத்தனை கட்சித் தலைவர்களும் இருக்கிறார்கள். அவர்கள் 'இந்த வரியைப் போடவேண்டாம்' என்று முடிவு செய்து விட்டாலும், 'வரி போட்டே தீருவோம்' என்றுகூறி நாங்கள் வரிபோட மாட்டோம். அது காங்கிரசுக்காரர்களின் வழக்கம்.

"சட்ட மன்றத்தை உதகையில் நடத்துவதற்கு எல்லாக் கட்சித் தலைவர்களும் ஒப்புக்கொண்டால்தான் அனுமதிப்போம்; இல்லையேல் உதகையில் சட்டமன்றம் கூடாது என்று கூறிய நிதியமைச்சர், பிறகு—தி.மு. கழகம் எதிர்த்தும்கூட—'உதகைக்குப் போய்த்தான் தீருவோம்' என்று கூறி, உதகைக்குப் போனார்; அப்படி நாங்கள் செய்ய மாட்டோம்."

—என்று அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ஜனநாயகம் வாழ வேண்டுமென்று விரும்பும் நடுநிலையாளர்களே! இப்போது கூறுங்கள் இந்த நாட்டில் யார் உண்மையான ஜனநாயக வாதிகள்?

ஃ

பேனா ஓவியம் [அடுத்த பக்கம்]

பேனஓவியம்

கறுப்புக் கண்ணடி!

"கொலைகாரனின் நெஞ்சை விட ஏமாற்றப்பட்டவனின் இதயத்தில்தான் ஆத்திரம் அதிகமிருக்கும்!"

—என்பது ரஷ்ய நாட்டுப் பழமொழி!

இதை நாம் நம்பத்தான் வேண்டும் என்று கட்டாயப் படுத்துகிறார், இந்த மனிதர்!

"இரும்புத் திரை"க்குள்ளே என்ன நடக்கிறது என்பதே உலகிற்குத் தெரியாதாம். அதுபோல இவருடைய 'கறுப்புத் திரை' மூடிய கண்களுக்குள்ளே உருளும் விழிகள் சொல்லுகின்ற உண்மைகளை இந்த நாடும் இதுவரை தெளிவாக உணர்ந்தது கிடையாது!

கம்பீரமற்ற உருவம்தான் — ஆனால் உள்ளத்தால் காகபட்டரையும் வென்றுவிட்ட வீரர்!

சக்கரவர்த்தி என்ற பட்டம் அவர் குலம் சூட்டிக் கொண்டது—சாணக்கியர் என்ற பட்டம் நாட்டோரால் சூட்டப்பட்டது!

வேட்டு முழக்கத்தால்—காட்டு முறை தர்பாரால்—நாட்டு மக்களை ஆட்டி வைத்துத் துரைத்தனம் நடத்துவேன் என்று ஆர்ப்பரித்தவர்; விரைவிலேயே முக்காடிட்டு மூலைக்குத் துரத்தப் பட்டவர்!

இப்படி வரலாற்றில் இடம் பெற்றிருந்த பூணூல் வேந்தர் தான்—பூசுரர் தெய்வம்தான்—புரோகித ஜோதிதான் — இன்று புது உருக்கொண்டு காட்சி தருகிறார்!

தமிழகத்து அரசியலில் அவருக்குக் காலத்தால் மாருத 'களங்கம்' ஒன்றுண்டு! மொழிப்பற்றுக் கொண்ட மக்களின்மீது இரத்த வெறி பிடித்த ஓநாயாக அவர் பாய்ந்த கொடுமையை—மொழிப் போரில் இருவரை; மும்முனைப் போரில் அறுவரை சாவூருக்கு அனுப்பிவைத்த கோரத்தை நாடு மறக்கவில்லை; நன்றியைக் கொன்ற காரணத்தால் அந்த 'துஷ்டரை'க் கொஞ்சம் தூரவும் விலக்கி வைத்தது!

ஆனால், வடக்கேயும் அந்த வயோதிகருடைய அரசியல் வாழ்க்கை பறிக்கப்பட்டுவிட்டது!

அந்தோ, மாபெரும் ஏமாற்றம்!

அதன் வேகத்தைத் தாங்க மாட்டாமல்தான் பசுல்லா ரோட்டிலிருந்து அந்தப் பரிதாபத்திற்குரியவரின் புலம்பல் விடாது எழும்பிக் கொண்டிருந்தது!

'அரசியல் என்கின்ற ஆபத்தான சிற்றின்பத்தை இனித் திரும்பியும் பாரேன்' என்று திரும்பிக்கொண்ட அவரது முகத்தைத் 'திடும் திடு'மென சில பிரச்சினைகள் அகிலத்தின் பக்கம் திருப்பிவிட்டன; அவர் ஆலோசனைகளை அல்ல; அறிவுரைகளை வழங்க ஆரம்பித்தார்.

'அபஸ்வரம்' என்றார்கள் சுதந்திரகீதம் எழுப்பிக் கொண்டிருந்த ஆளவந்தார்கள்! ஆனால் எடுத்த பணியைத் தடுக்க எவருமில்லை — என்று தொடர்ந்து நடத்திக் கொண்டுதான் இருந்தார்அவர், தன்னுடைய எதிர்ப்புப் பயணத்தை!

எலும்புருக்கி நோயைத் தடுக்க பி. சி. ஜி. மருந்து பயன்படுத்தப்பட்டபோது, "மாபாதகம்; நாட்டு மக்களின் கண்களைக் குருடாக்கும் மன்னிக்க முடியாத குற்றம்!" என்று மார்தட்டிப் பாய்ந்தார்!

"நிலச்சீர்திருத்தம் செய்யுமா நேரு சர்க்கார்? அந்தோ, மாபெரும் கொடுமை! நில உடைமைக்கு உச்சவரம்பு கட்டுவதால், ஊழலுக்கு ஆலவட்டம் சுற்றுதீர்கள்! கூட்டுறவு முறையால் கேடுகள் பலவற்றை வேண்டுமென்றே வரவழைக்காதீர்கள்!" — என்று ஆர்ப்பரித்தார்! மாஜி கவர்னர் ஜெனரலின் அந்த எதிர்ப்புகளைத் துச்சமென்று எடுத்தெறிந்து பேசி விட்டார், பண்டிதர்!

காமென்வெல்த்திலே இந்தியா கை கட்டி நிற்பானேன் — நெறி கெட்டு வாழ்வானேன் — என்று வினு எழுப்பி விடை கிடைக்காது விழ்ந்தார்!

அன்றொரு நாள் ஆரத்தி எடுத்து அழகழிந்த இந்திப் பெண்ணை வரவேற்றார்; இன்று தீயினும் கொடியது 'இந்தி' என்று குதிக்கிறார்!

ஏன் இந்த மாற்றம்?

அதிரும் குரலில் முழக்கமிட்ட அந்த அந்தண சிரேஷ்டர் குதிருக்குள் அடைபட்ட பூனையாகப் போவாரா? ஆகவேதான், எந்த காங்கிரசின் நிழலிலே ஒரு நாள் பதவித் தேன் குடித்தாரோ—இன்று அதே குடி வெறியிலேயே அந்த மரத்தை வெட்டுவேன் என்று கோடலி எடுத்துப் புறப்பட்டுவிட்டார் போலும்!

ஆமாம்; இன்று அவர் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியாரல்ல; 'சுயராஜ்யக் கட்சி ராஜாஜி' யாகி விட்டார்!

தனிக் கட்சி அமைத்து அரசியல் களத்திலே குதித்துவிட்ட அவர், காங்கிரசுடன் நேரடிப் போட்டியில் ஈடுபடத் தயாராகி விட்டார்!

நல்லதோர் எதிர்க்கட்சி ஜனநாயக நாட்டுக்குத் தேவைதான் என்பதை மறுப்பவர் யாருமில்லை. ஆனால் இந்த சுயராஜ்யக் கட்சிக்கு 'எதிர்க்கட்சி' என்ற பெயர் எள்ளளவும் பொருந்தாது என்றுதான் முடிவெடுக்க வேண்டியிருக்கிறது!

ஆச்சாரியார் கண்ட அந்தப் புதுக்கட்சி பிற்போக்கு சக்திகளின் தொட்டில் — முற்போக்கு எண்ணங்களை முறியடித்துப் போடும் மதயானை — பழைய பாதையிலேயே நகர்ந்து நடைபோடும் கிழ ஆமை!

இன்று ஆச்சாரியாரின் பின்னல் அணிவகுத்து நிற்போரைக் கண்டால் — அவர்களது பூர்வீகத்தை ஆராய்ந்தால் — இந்த 'அபாயம்' பளிச்செனத் தோன்றுகிறது!

புதுக் கட்சியின் தலைமைப் பதவி தனக்குத் தரப்படுகிறது என்பதற்காகக் காங்கிரசை விட்டு விலகிவிட்ட என். ஜி. ரங்கா—டாடா நிறுவனத்தின் தலைமை ஆலோசகரான பொருளாதார நிபுணர் மனு மசானி—இப்படிப் பெருந்தனக்காரர்கள் அந்த முகாமுக்கு ஓடியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல; கட்சி துவக்கி இன்னும் ஒருமாதம்கூட முழுதாக முடியவில்லை; அதற்குள் ஏறத்தாழ 10 இலட்ச ரூபாய்வரை நிதி குவிந்துவிட்டது!

இப்படி நிலப்பிரபுக்களின் முகாமாக—பழைமை விரும்பிகள் அமைத்திருக்கும் புதுப் பாசறையாக உருவாகி வருகிற அந்தக் கட்சியின் அவசியம் குறித்து ஆச்சாரியார் அருமையான விளக்கம் ஒன்றைத் தந்திருக்கிறார்:

"காங்கிரஸ் பழைய துடைப்பமாக மாறிவிட்டது; அதில் அதிகம் அழுக்கு சேர்ந்துவிட்டது! ஆகவேதான் புதுத் துடைப்பத்தை உருவாக்கி இருக்கிறோம்!"

—இப்படிப் புனிதமான காங்கிரஸ் இயக்கத்தைப் புழு, பூச்சி நெளியும் சாக்கடை மொழியிலே தாக்கிய போதிலும்கூட பண்டித நேரு அவரது முயற்சியைப் பாராட்டியிருக்கிறார்!

சுதந்திரக் கட்சி மிக நன்றாக வளர்ந்து நல்லதொரு 'கன்சர்வேடிவ் கட்சி'யாக வாழ வேண்டும் என்று நேரு மட்டுமல்ல; கிருஷ்ணமேனன்கூட வாழ்த்தி விட்டார்!

ஆச்சாரியாரின் எதிர்ப்பு அணிக்கு எங்கிருந்து கிடைக்கிறது இந்த வரவேற்பு என்கிறீர்களா? செல்லரித்த பண்டம் போல் மக்களிடம் செல்வாக்கு இழந்துவிட்ட காங்கிரஸ், அடுத்த தேர்தலில் என்ன அவல முடிவுக்கு ஆளாகி விடுமோ என்ற அச்சம் ஆள்பவர்களிடையே அரும்பி விட்டது. இந்த அபாயத்தைக் கணந்தோறும் எடுத்து உணர்த்திக் கொண்டிருக்கிறது, கேரளா! போகிற போக்கைப் பார்த்தால்--சென்னை நகரசபைத் தேர்தல் முடிவைக் கவனித்தால் — தமிழகத்திலேயேகூட அடுத்தமுறை தலையெடுக்க முடியாதோ காங்கிரஸ் என்ற சந்தேகம் தோன்றி விட்டது!

ஆகவே, அத்தகைய ஆபத்துக் காலத்தில் வேறு கட்சியினர் பலம் பெறுவதைவிட, காங்கிரசிலிருந்து சென்றவர்களே எதிர்முகாமில் நிற்பது மேலல்லவா? நீண்டகால காங்கிரசின் தலைவர் ஆச்சாரியார்—அவர் அழிக்கத் துணிவாரா, காங்கிரசை? அவர் நீரூற்றி வளர்த்து விட்ட காங்கிரஸ் என்ற நெடுமரத்தை அவரே வெட்டி வீழ்த்தத் துணிவாரா? இந்த நப்பாசைகள்கூட மேற்கண்ட வரவேற்புகளுக்குக் காரணமாக இருக்கலாம்! புதுக் கட்சி, வீழ்ந்து கொண்டிருக்கும் காங்கிரசைத் தூக்கி நிறுத்தும் தூணாகவும் பயன்படலாம் என்று கருதுகிறார்கள்போலும்!

ஆகவே ஏமாற்றத்தால் எழும்பிய இந்தப் புதுக்கட்சி பழமைக்குத் தூபமிடப் போகிறதா? நல்லாட்சிக்குப் பயன்படப் போகிறதா? அல்லது பாராளுவோரின் 'பாக்கெட்'டுக்குள் விழப்போகிறதா?

ஆமாம்; அதன் எதிர்காலம் என்ன வென்று ஆச்சாரியாருக்கே தெரிந்திருந்தால்கூட, அது என்னவென்று மறைத்து விடுகிறதே கறுப்புக் கண்ணடி, மக்களின் கண்களிலிருந்து!

—சொர்ணம்

ஆச்சாரியார்

★

அன்றும்...

- இந்தியை அரவணைத்து இருதயத்தை இரும்பாக்கிக் கொண்டார், இருபதாண்டுகளுக்கு முன்பு....
- தஞ்சை பண்ணையாள் சாகுபடிச் சட்டத்தைக் கொண்டு வந்தார்...
- விற்பனை வரியைக் கட்டாதவர்களை உடனடியாகக் கைது செய்ய வேண்டும் என்ற புரட்சிகரமான சட்டம் தேவை என்று முழங்கினர்...
- துப்பாக்கி எடுத்து பிணமலை குவித்தார்.... ஆயிரக் கணக்கிலே விடுதலைவீரர்களைப் பிடித்தடைத்தார் சிறையில்........அவர்களின் உரிமையைப் பறித்தார். இவை எல்லாம் அன்று....

இன்றும்...

- இன்று, இந்தியை விரட்டும் முதல் மனிதன் நான்தான்—என்று மார்தட்டுகிறார்!
- இன்று நிலச் சீர்திருத்தத்தை எதிர்த்து உழவர் பெருங்குடி மக்களின் விரோதியாக மாறிவிட்டார்!
- இன்று, பெருந்தனக்காரர்களின்— நிலச்சுவான்தார்களின் வழிகாட்டியாகத் தன் நிலையை மாற்றிக் கொண்டார்!
- இன்றே......தனி மனிதனின் உரிமைக்காகவே தான் போராடப் போவதாக புதுக் கட்சியின் பிறந்தநாள் விழாவிலே முழங்கியிருக்கிறார்!

'சுயாட்சி சமஷ்டி'ச் சாயம் வெளுக்கிறது!

தி. மு. க: என்னப்பா தமிழரசு! என்ன வெகு வேகமாகப் போய்க் கொண்டிருக்கிறாயே?

தமிழரசு: மாநாடல்லவா, அடுத்த வாரம் நடைபெறப் போகிறது?

தி. மு. க: எந்த மாநாடு?

தமிழ: தஞ்சை மாவட்டத் தமிழரசுக் கழக முதல் மாநாடு.

தி. மு. க: இப்போதுதான் முதல்....மாநாடா?....... கூட்டம் சேருமா?

தமிழ: ஏன் உனக்கு இந்த சந்தேகம்...? உங்களுக்கு மட்டும்தான் கூட்டம் சேரும் என்ற நினைப்பிலே பேசுகிறாயோ? கட்டணமெல்லாம் ஒன்றும் கிடையாது. கூட்டம் தாராளமாய்ச் சேரும்.

தி. மு. க: ஏன் நிறுத்திவிட்டாய்? 'உங்கள் மாநாடு மாதிரி கட்டணம் போட்டால், கூட்டத்திற்கு ஆளைத் தேடிப் பிடித்து இழுத்து வர வேண்டும்.' என்றுகூறி வாக்கியத்தை முடியப்பா!

தமிழ: இந்தா. இந்தக் கிண்டலெல்லாம் வேண்டாம். எங்களுக்கும் உங்களைப்போலவே பேச, நடக்கத் தெரியும்.

தி. மு. க: ஏன், அப்படி எப்போதும் செய்வதில்லை?

தமிழ: பிறகு தேசியப் பரம்பரையான எங்களுக்கும் வெள்ளைக்காரன் அடிதாங்கிகளான உங்களுக்கும் வேற்றுமை என்ன?

தி. மு. க: யாரப்பா வெள்ளைக்காரன் அடிதாங்கி? தேசியப் பரம்பரையான நீயா? அல்லது நானா?

தமிழ: நீதான்!

தி. மு. க: நண்பா, தேசியக் காங்கிரஸ் என்பதே தேசிய இனங்களின் யுத்தசபை என்று உங்கள் ம. பொ. சி. கூறியிருப்பது உனக்கு நினைவிருக்கிறதா?

தமிழ: ஆமாம்!

தி. மு. க: அந்த யுத்த சபை பிறந்த இடம் எது தெரியுமா?

தமிழ: 'ஹ்யூம்' என்ற வெள்ளைக்காரன் ஏற்படுத்தியதுதான் தேசியக் காங்கிரஸ் என்று கூறுவீர்கள். அது எனக்குத் தெரிந்ததுதானே?

தி. மு. க: அது மாத்திரம் அல்ல நண்பா! தேசியக் காங்கிரஸை உண்டாக்கிய ஹ்யூமிற்கு அந்தக் கருத்தை மறைவாகக் கூப்பிட்டுச் சொல்லியவர் அப்போதிருந்த வெள்ளைக்கார கவர்னர் ஜெனரல் தான்!

தமிழ: இதை நான் நம்ப முடியாது; நாங்கள் பிறந்த வளர்ந்த தேசியக் காங்கிரசை அவதூறு செய்யாதே. உன் நாக்கு அழுகிவிடும்.

தி. மு. க: இதை நான் சொல்லவில்லை நண்பா, காந்தியடிகள் எழுதிய 'தென்னாப்பிரிக்க சத்யாக்கிரகப் போராட்டம்' என்ற நூல் கூறுகிறது. நாக்கு இப்போது யாருக்கு அழுக வேண்டும்? எனக்கா? இறந்த விட்ட காந்தியடிகளுக்கா?

தமிழ்: ஐயோ! அபச்சாரம்! அபச்சாரம்! நீ ஆயிரம் பேசு! உன் கொள்கை விலை போகாது! தமிழரசுக் கொள்கைதான் நிற்கும்; வெல்லும்!

தி. மு. க; அதைத்தான் நாடு தெரிவித்துக் கொண்டிருக்கிறதே; தி. மு. கவிற்கு வெற்றி மாலையைத் தருவதன் மூலமும், தமிழரசுக் கழகத்திற்குத் தோல்வித் தோடாவை அளிப்பதன் மூலமும்!

தமிழ: யாருக்குத் தோல்வி? அழகான லட்சியங்கள்கொண்டது எங்கள் கழகம்!

தி. மு. க: என்னப்பா லட்சியங்கள் அப்படி, நாங்கள் சொல்லாத லட்சியங்கள்?

தமிழ்; தனிச் 'சுயாட்சி' பெற்ற தனி நாடாக தமிழ் நாடு மாற வேண்டும் — இது முதற் கொள்கை.

தி. மு. க: அப்படியானால், 'பாரத யூனியன்' என்னாயிற்று? 'அகில இந்திய ஒற்றுமை' மண் தின்ற கதையாயிற்றா?

தமிழ: அடடா இப்படியெல்லாம் குறுக்கே கேள்வி கேட்டால் என்னால் பதில் சொல்ல முடியாது.

தி. மு: க: சரி, சொல்லு!

தமிழ; 'பாரத பெடரேஷன்' பிறக்கும். அதில் ஒரு கோடி ஜனத்தொகையுள்ள கேரள நாட்டிலிருந்து பத்துப் பிரதிநிதிகள் பார்லிமெண்டிற்குப் போவார்கள் என்றால், ஆறு கோடிக்கும் அதிகமுள்ள உத்திரப் பிரதேசத்திலிருந்தும் பத்துப் பிரதிநிதிகள் வருவார்கள். பிறகு நீங்கள் சொல்லும் வடநாட்டு ஆதிக்கம் இருக்குமா? எப்படி எங்கள் தலைவர் திட்டம்?

தி. மு. க: அபாரம்! அபாரம்! ஆனால்...ஒரு சந்தேகம். இந்த 'விசித்ர' ஜனநாயகத்தை மெஜாரிட்டியான வடநாட்டார்கள் ஒப்புக் கொள்வார்களா? ஒப்புக் கொள்ளாவிட்டால் என்ன செய்வீர்கள்?

தமிழ: போராட்டம்! தமிழ்நாடு கொதித்தெழும்! சிறைச்சாலை நிரம்பி வழியும்!

தி. மு. க: உங்கள் தலைவர் தான், "சிறைக்குள் போகாமல் வெற்றிகாண விரும்புகிறேன்" என்று போராட்டங்களைப்பற்றித் தன் கருத்தைத் தெரிவித்திருக்கிறாரல்லவா?

தமிழ: ஆமாம்...மூன்றுநான்கு மாதங்களுக்கு முன் கோமளீஸ்வரன்பேட்டையில் அப்படித்தான் அவர் பேசியதாக நினைவு......

தி. மு. க: சரி...அந்தக் குழப்பம் கிடக்கட்டும்! 'சமஷ்டி' வேண்டுமென்கிறீர்களே! திராவிட சமஷ்டியை ஏற்றுக்கொள்ளுங்களேன்.

தமிழ: சேச்சே!....இது சிறிய சமஷ்டி!—நாங்கள் கேட்பது பெரிய சமஷ்டி! அப்போதுதான் வல்லரசுகளின் இரையாகாமல் இருப்போம்!

தி. மு. க: 'சமஷ்டி' நாடுகள் உலகில் எங்காவது பெரியதாக இருக்கிறதா? பெரிய 'சமஷ்டி'யால் மட்டுமே வல்லரசுகளிடமிருந்து தப்பிக் கொண்டதாக வரலாறு இருக்கிறதா? சின்னஞ் சிறு ஸ்விட்ஸர்லாந்து இரு உலகப் போர்களிலும் தப்பி வல்லரசுகளின் வலையில் விழாமல் வாழுகிறதே, அது 'நாற்பது கோடி மக்களின் சமஷ்டியா'?

தமிழ: ....

தி. மு. க: ஏன் விழிக்கிறாய் நண்பா? 'இந்திய சமஷ்டி'க் கருத்து என்னாயிற்று இப்போது?

தமிழ: என்ன , இருந்தாலும், திராவிடம் மூன்று பக்கம் கடலுள்ள பிரதேசம். விரைவில் எதிரிகளின் வாயில் விழுந்துவிடும்!

தி. மு. க: நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட இங்கிலாந்து எந்த எதிரியின் வாயில் விழுந்திருக்கிறது? அது வல்லரசாக அல்லவா திகழ்கிறது? இன்னும் எத்தனையோ தீவு (நாடு)கள் சுதந்திரமாய் இருப்பதை கவனிக்க மறந்தது என்?

[தொடர்ச்சி பக்கம்—8]

திருச்சி மாவட்ட

தி. மு. கழக 3-வது மாநாடு

சூன் திங்கள் 20, 21-ம் நாட்களில் துறையூரில் நடைபெறும்.

தலைவர்: 'சிந்தனைச் சிற்பி' சி. பி. சிற்றரசு

திறப்பாளர்: 'முரசொலி' மாறன் எம். ஏ.

அறிஞர் அண்ணா, நாவலர் நெடுஞ்செழியன்

கழக முன்னணிச் சொற்பொழிவாளர்கள், கலைஞர்கள், கவிஞர்கள், சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்கின்றனர்.

20—6—59 இரவு கலைஞர் மு. கருணாநிதி எம். எல். ஏ. அவர்களுடன் முரசு நாடக மன்றத்தார் நடிக்கும் 'உதயசூரியன்' நாடகம் நடைபெறும்.

இசை நிகழ்ச்சிகளும் உண்டு.

நன்கொடை இருநாட்களுக்கும் ரூ. 10, 5, 2. பெண்கள் ரூ. 1.

—வரவேற்புக் குழு

5

பொழுது விடிந்தது. புலவர் துயிலெழுந்தார். அசதியை உதறிவிட்டுப் படுக்கையிலிருந்து கிளம்பியவர் சுற்றுமுற்றும் பார்த்தார். வழக்கமாக அவரது படுக்கையினருகே வெள்ளிச் செம்பில் வைக்கப்பட்டிருக்கும் தெளிந்த நீராகாரத்தைக் காணவில்லை. எழுந்ததும் வாய் கழுவி நீராகாரம் அருந்துவது இளமை முதல் புலவர் பெருமான் பழகிக் கொண்ட ஒன்றாகும். அந்தப் பழக்கத்திற்கு இத்தனை நாளும் தடங்கல் ஏற்பட்டது கிடையாது. அன்று ஏற்பட்ட மாறுதல் அவருக்குத் திகைப்பை உண்டாக்கியது.

முத்துநகை படுத்திருந்த இடத்தைப் பார்த்தார். அங்கே அவள் இல்லை. தெருப்பக்கம் திரும்பினார். கதவு திறந்து கிடந்தது. எழுதும்போது பெய் மறந்து எழுத்தாணியைத் தலையிலே குத்திக் கொண்டது போன்ற அதிர்ச்சியால் துடித்தார்.

"முத்துநகை! முத்துநகை!!" என விடெங்கும் ஓடினார். தோட்டத்துப் புறம் சென்று சப்தம் போட்டார். அவரது பரபரப்பு அடங்கவில்லை. கிணற்றடிக்கு ஓடினார். கிணற்றுக் கட்டையில் மர உருளை மட்டுமே தொங்கிக் கொண்டிருந்தது. கயிற்றுச் சுருளைக் காணவில்லை. "அய்யோ அம்மா!" என அழத் தொடங்கியவரின் கண்ணில் எதிர்த்தாற் போல் கயிறும் தோண்டியும் தோன்றவே ஆறுதல் அடைந்தார்.

மறுபடியும் உள்ளே வந்தார் அவள் படுத்திருந்த இடத்தைக் கூர்ந்து பார்த்துக் கொண்டே நின்றார். ஒரு ஓலை தலையணைக்கு அருகே தலை நீட்டிக் கொண்டு கிடந்தது. ஆத்திரமும் ஆவலும் ததும்ப அதை எடுத்துப் படித்தார். அவர் நாவு உதிர்த்த சொற்களை அவர் காதுகள் நம்பவில்லை. அவர் விழியில் பட்ட எழுத்துக்களை அவரது மொழியறிவு ஏற்றுக்கொள்ளவில்லை. அத்தனை பயங்கரமான வாசகங்களை அந்த ஓலை பேரிடியென முழங்கியது. மாரி மின்னல்போல் தோன்றிடச் செய்தது. கண்களை இறுக மூடிக் கொண்டார். இமை இடுக்குகளின் வழியாக நீர்த்துளிகள் எட்டிப் பார்த்தன. தன்னையே நம்பாமல் மறுமுறையும் படித்தார்:

"அன்புள்ள தந்தையே! என்னை மன்னித்து விடுங்கள். சோழப் பெருநாட்டின் கீர்த்தியைக் குலைக்கச் சதி நடைபெறுகிறது. அந்தச் சதியிலே யார் யாரோ ஈடுபட்டிருக்கிறார்கள். என்னையே நான் சந்தேகப்படுகிற அளவுக்கு இந்தத் திருநாட்டில ஒரு புதிய நிலை உருவாகியிருக்கிறது. கரிகாற் சோழரின் உயிர் குடிக்கவும், நமது தாயகத்தின்மீது படைகொண்டு மோதி பழி தீர்க்கவும் பகைவர்கள் நேரம் பார்த்திருக்கிறார்கள். அவர்கட்கு இங்குள்ள சிலர் எடுபிடிகளாய் அமைந்து விட்டார்கள். அந்தோ! சுதந்தரத் திருநாடே! உன் கதி இப்படியா ஆகவேண்டும்? இரவெல்லாம் எண்ணி யெண்ணிக் கண்ணீர் வடித்தேன்; தந்தையே—

தமிழ் வளர்க்கும் நல்லோர் எனப் போற்றப்பட்ட பெருமக்கள் கூட அந்தத் தமிழ் வளர்த்த பண்பை மறந்து விட்டனர் என்பதை நினைக்கும்போது என் நெஞ்சில் நெருப்பு மூண்டுவிட்டது. நான் ஏன் சோழ நாட்டில் பிறந்தேன் என்று எனக்கு நானே கேட்டுக் கொண்டேன். விடை கிடைத்தது. தாயகத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு எனக்கு இருக்கிறதாம். அந்தப் பொறுப்பை நிறைவேற்றப் புறப்பட்டுவிட்டேன். இந்தக் காரியத்தில் என் தந்தையே குறுக்கிட்டாலும், இறந்துபோன என் தாயே எழுந்துவந்து தடுத்தாலும் என்னையும் என் லட்சியத்தையும் தோற்கடித்துவிட முடியாது என்ற உறுதி பூண்டுக் கிளம்பி விட்டேன்.

சோழ நாட்டுப் பகைவர்களும், துரோகிகளும் மண்ணோடு மண்ணாகும வரையில் எனக்கு வேலையிருக்கிறது. அதுவரையில் என்னைத் தேடாதீர்கள். என் கடமையில் நான் வெற்றி பெற்று உயிரோடிருந்தால் திரும்பி வந்து தங்களை சந்திக்கிறேன். நான் கடமையில் உயிரைத் தந்து விட்டேன் என்றால் தங்கள் அனுமதியின்றி நான் எடுத்துச் செல்லும் செழியனின் புலிநகமாலை பட்டும் தங்களிடம் திரும்பி வந்து சேரும். அது, நான் செத்து விட்டேன் என்பதற்கு அடையாளம். என்னை வாழ்த்துங்கள் அப்பா! வணக்கம்.

அன்புள்ள,

முத்துநகை."

இனி எத்தனை தடவை படித்தாலும் அதே எழுத்துக்கள்தான் என்ற நம்பிக்கை அவருக்குவந்த பிறகே அந்த ஓலையைப் படிப்பதை நிறுத்திக் கொண்டார். தமிழ் எழுத்துக்களை அவர் எத்தனையோ முறை கண்ணிலே ஒற்றிக் கொண்டு பரவசமுற்றிருக்கிறார். அந்த நேரத்தில் கண்களை மலர் கொண்டு தொடுவதுபோன்ற உணர்ச்சியையே அவர் பெற்றிருக்கிறார். ஆனால் இந்த எழுத்துக்களோ ஒவ்வொன்றும் ஒவ்வொரு குத்தீட்டி போல அவரது கண்களில் பாய்ந்து கொண்டிருந்தன. முத்துநகையின் திடீர் மனமாற்றத்திற்குக் காரணம் என்ன? சோழ நாட்டுக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தை இவள்போய்த்தடுத்து நிறுத்துவதா? எல்லாம் ஒரே புதிராக இருந்தது புலவருக்கு!

பாவம், புலவரைத் தவிக்க விட்டு விட்டு முத்துநகை நேரே கரிகாற் சோழனுடைய அரண்மனை வாயிலில் போய் நின்றாள். என்றுமில்லாத அதிசயமாக ஒரு பெண் தன்னந்தனியாக விடியற் காலையில் வந்து நிற்பது கண்ட காவலர்கள் வியப்புற்றனர்.

"யாரம்மா? என்ன வேண்டும்?" எனக் கேட்டவாறு அவளைச் சூழ்ந்து கொண்டனர்.

"நான் அவசரமாக அரசரைப் பார்க்க வேண்டும்!" என்று நடுங்கியவாறு முத்துநகை கூறினாள்.

உடன் இரு வீரர்கள் உள்ளே சென்று வெகு நேரம் கழித்து வந்தனர். என்ன பதில் சொல்லப் போகிறார்களோ என்று ஏக்கத்துடன் எதிர்பார்த்த முத்துநகை மகிழும் வண்ணம் பதில் கிடைத்தது. அவளை அழைத்து வருமாறு சோழன் உத்திரவு தந்துவிட்டான்.

வீரர்களுடன் முத்துநகை கரிகாலனின் இருப்பிடத்தைநோக்கி நடந்தாள். அவள் நடந்து செல்லும் வழியெல்லாம் தாயகத்துக் கலைச் செல்வம் உயிர் பெற்றுச் சிலைகளாய், ஓவியங்களாய்விளங்கிய காட்சி கண்டு பெருமூச்செறிந்தாள். தங்கமெருகேறிய தூண்களும், அவைகளில் பொருத்தப்பட்ட தந்தத்தால் ஆன விளக்குகளும் அடடா; தமிழகத்து வளமே வளம் என அவளைக் கூறிடச் செய்தது. மன்னர் போரிட்டுக் கொன்ற புலி, சிங்கம், சிறுத்தைகளின் தோல்கள் ஒருபுறத்திலே மாட்டப்பட்டிருந்தன. நசுங்கிப்போன ஒரு மணிக் கிரீடம் சுவற்றில் மாட்டப்பட்டிருந்தது. அதன் கீழே, "தோல்வியுற்ற பன்றி நாட்டரசரின் மணிமுடி"—என்ற எழுத்துக்கள் செதுக்கப்பட்டிருந்தன. ஒரு நீண்ட சுவற்றில் கரிகாலனின் இலங்கைப் படையெடுப்பை விளக்கும் ஓவியம் தீட்டப்பட்டு, அது காண்பவர் உள்ளத்தில் புதிய எழுச்சியை உண்டாக்கிக் கொண்டிருந்தது. அதனையடுத்து ஒரு பெருந்தூணில் மிகவும் கனமான வாள் ஒன்று மாட்டப்பட்டிருந்தது. அந்த வாளின் முனை ஒடிந்திருந்தது. அதன் கீழே, "இந்த வாள் இருங்கோவேள் மன்னர் ஓடும்போது போர்க்களத்தில் விட்டுச் சென்றது" எனத் தீட்டப்பட்டிருந்தது!

அவைகளை யெல்லாம் காணக் காண முத்துநகைக்கு மேலும்

★ சுனையில் சுந்தரன் ★

ஆத்திரம் மூண்டது. இவ்வளவு சிறப்புக்குரியவனை—சிம்மமெனப் புகழப்படுபவனை — தன் நாட்டு மன்னவனைக் கவிழ்ப்பதற்குச் சதியா?—எனக் கேட்டுக் குமுறுவதுபோல் அவள் மென்மையான இதழ்கள் பெருத்துத் துடித்தன.

இறுதியில் கரிகாலன் இருக்கும் மாளிகைக்குள் அவள் நுழைந்தாள். அவனைக் கண்டதும் கரிகாலனுக்கு ஒரே ஆச்சரியம்!

“என்ன—நீயா?” எனப் பதட்டத்துடன் கேட்டான்.

“ஆமாம்—கொஞ்சம் தனியாகப் பேச வேண்டும்!” என்றாள், முத்துநகை.

அரசன், காவலர்களைச் சைகை காட்டி வெளியே அனுப்பி வைத்தான். முத்துநகை அரசரையே பார்த்துக்கொண்டு நின்றாள். கரிகாலனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. “என்னம்மா! எங்கே வந்தாய்? என்ன நடந்தது? புலவர் எங்கே?”

—இப்படிக் கேள்விகளை அடுக்கிக்கொண்டேபோன சோழனின் காலில் தடாலென விழுந்து, “மன்னவா! என்னை மன்னியுங்கள்!” எனக் கதறி அழுதாள் அந்தப் பைங்கொடி.

“எழுந்திரம்மா! செய்தியைச் சொல்! எதற்காக இந்தக் காலை நேரத்தில்? விடிந்ததும் விடியாததுமாக?” எனக் கேட்டான் சோழன்.

“விடியவில்லை அரசே; விடியவில்லை! சோழ நாட்டைச் சூழ்ந்துள்ள இருள் இன்னும் விலகவில்லை. அதைத் தெரிவிக்கவே தங்களிடம் ஓடி வந்தேன்!”

“என்ன சொல்லுகிறாய்?”

“திக்கெட்டும் படையெடுத்து நிலம் பல வென்றவர் தாங்கள்! சோழர் படையினர் கொட்டும் முரசொலி கேட்டுத் தாள் வீழ்ந்த பகைவர் ஏராளம்! ஏராளம்! ஒளியரை, பொதுவரை, இலங்கையை வென்றீர்கள்! வேளிர் குடி மன்னரைத் தோற்கடித்தீர்கள்! தங்கள் வெற்றிவேலின் பெருமையைப் புகழாத நாடு இல்லை! இமயத்திலே நமது கொடியினைப் பொறித்தீர்கள்! இல்லையென்று கூறவில்லை! ஆனால் ஒன்று மன்னா; இத்தனை வெற்றித் திறமிருந்தும் தங்களுக்குத் தாயகத்தில் முளைவிட்டு வளரும் துரோகக் கூட்டத்தைப் புரிந்து கொள்ளும் திறமில்லை! மன்னிக்கவும்; தங்கள் பரந்த தூய உள்ளம் அந்தத் துரோகிகளைப் பற்றி நினைக்காமலே விட்டு விட்டது என்பதை நான் உணருகிறேன். ஆனாலும் அரசே! அந்தக் கூட்டம் வளருமேயானால் நாடு அழியும்; நமது பெருமை அழியும்!”

“என்ன; துரோகக் கூட்டமா? யார் அவர்கள்? எங்கிருக்கிறார்கள்?”

“அவர்கள் ஒன்றும் தனியிடத்தில் வாழ்வது கிடையாதே—காக்கைகளைப் போலக் கூட்டம் கூட்டமாகச் சேர்ந்து வாழ்வதும் கிடையாதே—துரோகிகள் நமக்குப் பணிவிடை புரியும் ஊழியர்களிலேகூட இருப்பார்கள்! படை நடத்தும் தளபதிகளிலேகூட இருப்பார்கள்! பாமாலை தொடுக்கும் புலவர்களிலேகூட இருப்பார்கள்!”

“எனக்கு ஒன்றுமே புரியவில்லை; கொஞ்சம் விபரமாகச் சொல்லம்மா!”

“அரசே! அந்தத் துரோகிகள் யார் என்று கண்டுபிடித்து நாட்டைக் காப்பாற்றுவதே என் வேலை. அதற்காகவே வீட்டை விட்டு வெளிக் கிளம்பிவிட்டேன்!”

“அப்படியானால்.........புலவர் அவர்களுக்குக் கூட........”

“அப்பாவுக்குத் தெரியாது. தெரியவும் கூடாது. தெரிந்தால் நான் திறமையற்றவள் எனக் கூறி என்னைத் தடுத்து விடுவார். அரசே! தாங்கள் எனக்குச் செய்ய வேண்டிய உதவியெல்லாம் இந்தச் சந்திப்பை ரகசியமாக வைத்துக் கொள்வது தான்!”

“நீ என்ன சொல்கிறாய் என்று உனக்காவது புரிகிறதா?”

“தோகை மயிலெனத் தாங்கள் நம்பியிருக்கிற சிலர் முள்ளம் பன்றிகள் என்பதை நிரூபித்துக் காட்டப் போகும் நேரம் ஒன்று வருகிறது. அதற்குத்தான் இந்தச் சந்திப்பு ஒரு ஆரம்பம். மன்னர் மன்னா! தங்களிடம் தோற்றோடிய இருங்கோவேள் எப்படியும் தங்களைப் பழி தீர்த்துக் கொள்ள அலைகிறான் என்பதை அறிவீர்கள் அல்லவா?”

“சொல்லு; கேட்கிறேன்!”

“தாங்களும் பாண்டிய மன்னரும் பவனி வந்த போழ்து இருங்கோவேளின் தளபதி தங்களைச் சதி புரிந்து கொல்வதற்குத் தலைநகருக்கு வந்திருந்தான்.......”

“ஆ! அப்படியா?”

“முழுதும் கேளுங்கள். தங்களைக் கொல்லவும் ஈட்டியைக் கையிலே எடுத்து விட்டான். அந்த நேரத்தில் பாண்டிய நாட்டு வீரர் ஒருவர் தங்களைக் காப்பாற்றினார்!”

“யார் அந்த வீரன்?”

“செழியன்!”

“என்ன, செழியனா? இப்போது அந்தச் செழியன் எங்கே?”

“அதற்கு மேல் என்னைக் கேட்டுப் பயனில்லை. செழியன் போன இடம் எனக்குத் தெரியாது. மேலால் விளக்கம் பெறவே நான் வீட்டை விட்டுப் புறப்பட்டிருக்கிறேன். செல்லும் வழியில் தங்களை எச்சரித்துவிட்டுப்போவது என் கடமையென எண்ணினேன்!”

“குழந்தாய்! என்னைக் கொல்லச் சதி நடக்கிறது சதி நடத்துகிறவன் இருங்கோவேள்-அவனை என்படை கொண்டு வெல்லுகிறேன். நீ எதற்காகக் கஷ்டப்பட வேண்டும்?”

“படையினால்மட்டுமேபகையை வென்றுவிட முடியுமா? புகை நுழையாத இடங்களிலும் பொல்லாத துரோகிகள் நுழைந்து விடுவார்களே; அவர்கள் யார் என்பதைக் கண்டுபிடிக்க வேண்டாமா?”

“அதற்கு?”

“அந்த ஒற்றர் வேலையை நான் மேற்கொள்ளுகிறேன் என்கிறேன்!”

“உன் கடமையுணர்வுக்கு—தாய்நாட்டுப் பற்றுக்கு—இந்தச் சோழனின் மணிமுடி வணக்கம் தெரிவிக்கத் தாழ்கிறது அம்மா! ஆனால் ஒன்று...அருமையாக உன்னை வளர்க்கும் புலவர் பெருந்தகையார் மன வேதனை அடைவாரே?”

“அவரைப்பற்றிக்கூட தாங்கள் ஆச்சரியமான செய்திகளைக் கேள்விப்படுவீர்கள் அரசே!”

இதைச் சொல்லும்போது அவள் நாக்கு நடுங்கிற்று. கண்கள் குளமாயின. ஆயினும் மறைத்துக் கொண்டு சமாளித்தாள். சோழன், அவள் மேலும் என்ன சொல்லப் போகிறாள் என்று எதிர்பார்த்தான். அவள் பேச்சை மாற்றினாள்.

“அதாவது அப்பாவும் என்னைப் போலவே ஒற்றர்வேலையை மேற்கொள்ள நேரிடலாம் என்கிறேன்.” எனக் கூறி, அரசனின் முகத்தைப் பார்த்தாள் அவன் முகத்தில் புதிய கம்பீரம் களை கட்டி நின்றது. தன்னுயிருக்காகவும் தாயகத்துப் பெருமைக்காகவும் தமிழ் வளர்க்கும் குடும்பமொன்று கவலைப்படுவது கேட்க அவனுக்குப் பூரிப்பு பொங்கி வழிந்தது. தன தந்தைக்குக் கூடத் தெரியாமல் நாட்டுப் பணி புரியப் புறப்பட்டுவிட்ட அந்த இளந் தமிழச்சியின் வீரத்தைக் கண்டு கரிகாலன் பெருமை கொண்டான்.

“உன்னை நான் வாழ்த்துகிறேன். உன் கடமைக்கு என்னென்ன வேண்டுமோ கேள்; தருகிறேன்!” என உரைத்தான்.

“அதிகம் எதுவும் தேவையில்லை. ஐந்தாறு வீரர் உடைகள்! ஒரு நல்ல குதிரை! அவ்வளவு போதும்!”

“ஆண் வேடத்தில் புறப்படுகிறாயா? உன் குரல் உன்னைக் காட்டிக் கொடுத்து விடாதா?”

“தங்களுக்கேன் கவலை? தங்களைக்கூட நான் ஏமாற்றக்கூடும்!”

கரிகாலன் சிரித்துக் கொண்டான். கைதட்டி மெய்காப்பாளனைக் கூப்பிட்டான். முத்துநகையை அழைத்துப்போய் யாருக்கும் தெரியாமல் அவள் கேட்பதைக் கொடுத்தனுப்ப உத்திரவிட்டான். முத்துநகை, சோழனிடம் விடை பெற்றுக் கொள்ளும்போது தன் தந்தையின் காதில் இந்தச் செய்தியைப் போட்டுவிடக்கூடாது என்று கெஞ்சிக்கேட்டுக் கொண்டாள். அவனும், “கரிகாலன் வாகுத் தவறமாட்டான்” என்று அவளைப் பார்த்துக் கனிவோடு உறுதி தந்தான். ஆபத்தான வேலையில—தடுத்தும் கேளாமல் அடியெடுத்து வைக்கிற அவளுக்கு அவன் நல்ல எச்சரிக்கை தந்து அனுப்பி வைத்தான்.

அவள் போனதும் கரிகாலனுக்கு ஒரே குழப்பம். புலவருக்கும் தெரியாமல் முத்துநகை இந்தக் காரியத்தில் ஈடுபட்டது ஏன்?—என்ற கேள்வி அவனைக் குடைந்தது. “தந்தை தடுத்து விடுவார்! அதனால்தான் அவருக்குத் தெரியக்கூடாது!” என்று முத்துநகை கூறிய சமாதானம் அவ்வளவு போதுமானதாக அவனுக்குப்படவில்லை. அப்பாவைப்பற்றிக்கூட ஆச்சரியமான சேதிகள் கேள்விப்படுவீர்கள் என்று அவள் கூறியதும், “தோகை மயில்” — “முள்ளம் பன்றி” என்ற வார்த்தைகளும் அவன் நெஞ்சிலே உருண்டோடின.

இப்படி அரசனுக்குக் குழப்பத்தையும், புலவருக்கு அதிர்ச்சியையும் உண்டாக்கி விட்டு, முத்துநகை வாட்டசாட்டமான குதிரையொன்றில் வீரன் உடையில் காட்டுப் பாதையில் கன வேகமாகப் போய்க் கொண்டிருந்தாள். அவளுடைய முதல் லட்சியம் செழியன் எங்கு கொண்டு செல்லப்பட்டான் என்று கண்டுபிடிப்பது. அதற்காகவே அவள் காட்டுப் பாதையில் அங்குமிங்கும் அலைந்து திரிந்தாள். இருங்கோவேளும் அவனது ஆட்களும் காடுகளில் தான் அலைந்து கொண்டிருக்கிறார்கள் என்று அவள் கேள்விப்பட்டதை வைத்து அந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டாள். நெடுநேரம் குதிரையை விரட்டியதால் அதுவும் களைத்துத் தானும் களைத்துக் கடைசியில் காட்டில் உள்ள ஒரு சுனையின் அருகே இறங்கினாள். சுனையில் நீர் அருந்தி, குதிரையையும் மேய விட்டுவிட்டுக் கொஞ்சம் காலாற்றிக்கொள்ள இங்குமங்கும் நடந்துகொண்டிருந்தாள்.

அப்போது சிறிது தொலைவில் யாரோ வரும் சந்தடி கேட்டது. பாறைகளைப்போல் அமைந்து காட்டாற்று நீரை வழியவிட்டுக் கொண்டிருக்கும் இரண்டு பெருங் கற்களுக்கிடையே நின்று உற்றுக் கவனித்தாள். ஒரு அழகான யுவதி! அங்கமெலாம் தங்க நிறம் பெற்ற தளிர்க்கொடி—ஆடியசைந்து அந்தச் சுனையை நோக்கி வந்துகொண்டிருந்தாள்.

தன்னருகேதான் அவள் வருகிறாள் எனக் கண்ட முத்துநகை, வேகமாக ஓடி ஒரு நீண்ட கல்லில் தூங்குவது போல் படுத்துக்கொண்டாள்.

சுனையருகே வந்துவிட்ட அந்தப் பருவச் சிட்டு படுத்துறங்கும் வீரனைக் கண்டாள்! திடுக்கிட்டாள்; ஓடிவிட எண்ணினாள்; ஓடவும் முயன்றாள். ஆனால், அவளது விழிகள் அவனைப் போக விடாமல் வேலியிலே சிக்கிக்கொண்ட ஆடைபோல் உறங்கும் வீரனின் மீது சிக்கிக் கொண்டன.



துள்ளிவரும் தமிழ் நடையழகை
அள்ளிவரும் புதிய அமைப்பு
முத்தாரம்
கலையழகுடன் நாட்டின் நிலைவிளக்கும்
கட்டுரைகள்; கதைகள்; கவிதைகள்
நிரம்பிய
இலக்கிய ஏடு!
விற்பனையாகிறது இதழ் — 27!

நூலேணி

சட்டசபைச் சொற்பொழிவுகள்

அறிஞர் அண்ணா

தென்னகத்தின் அரசியல் ஆசான், அறிவுலக மேதை அறிஞர் அண்ணா அவர்கள் சட்டமன்றத்தில் ஆற்றிய பல சொற்பொழிவுகளின் கோவையே "சட்ட சபைச் சொற்பொழிவுகள்' எனும் இந்நூல்!

பக்கத்திற்குப் பக்கம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தெளிவான—திட்டவட்டமான கொள்கைகளை எடுத்துக் கூறும் வண்ணம் அமைந்திருக்கிறது.

சிற்சில எழுத்துப் பிழைகள் இருந்தாலும், இந்த நூல், கருத்தைக் கவரும் முறையில் இருக்கிறது. நம்மியக்கத்தின் வளர்ச்சியையும், பேச்சையும், செயலையும் தொகுத்து வைத்துக்கொள்ளும் இம்மாதிரி பணிகள் மென்மேலும் வளர வேண்டும்.

[கிடைக்குமிடம்: கலைமகள் நிலையம், 126, பிராட்வே, சென்னை—1. விலை ரூ. 2. பக்கங்கள் 156.]

ஆங்கிலமா; இந்தியா?

ஆங்கில ஏடு. ஆசிரியர் "வேணு"

ஆட்சி மொழியாக இருக்கத் தக்குந்த மொழி எது? அகிலமெங்கும் பரவி, அறிவியல் துறையில் மிக வளர்ந்து, இலக்கியச் செல்வம் எனும் வற்றா வளத்துடன் சிறந்து நிற்கும் ஆங்கிலமா?— இல்லை — இவையொன்றுமற்ற இந்தியா?—என்கிற கேள்விக்கு ஆதாரங்கள் துணை நிற்க விடையளிக்கிறார், திரு. வேணு "ஆங்கிலமா, இந்தியா?" எனும் ஆங்கில ஏட்டின் மூலம்!

"ஆங்கிலத்தை அடியோடு வெறுக்கும் வடநாட்டார்—தேசியத்தார்—வெள்ளையர் தந்து போன போகப் பொருட்களை, தேவைப் பொருட்களை ஏன் பயன்படுத்துகிறார்கள்? அதைப் பயன்படுத்துவதில் ஏன் வெட்கம் கொள்வதில்லை? ரயில்,டெலிபோன், கார் போன்ற ஆங்கிலேயன் தந்த பொருட்களை விலக்கி வைப்பதில்லையே, ஏன்? இம்மட்டோ, ஆளவந்தார் தம் கட்சிக்கு இட்டிருக்கிற 'காங்கிரஸ்' என்ற பெயரே ஆங்கிலச் சொல்லன்றோ? முதலில் அதையல்லவா மாற்றவேண்டும்?"— இப்படிக் கேள்விகளை அடுக்குகிறார், நூலின் ஆசிரியர்! "பொருளாதாரக் கண்ணோட்டத்தோடு பார்த்தாலும் கூட, முன்னேற்றமடைந்து கொண்டிருக்கும் இந்தியா போன்ற நாடுகள், ஆங்கிலத்தைப் புறக்கணிப்பதால், வெளி நாட்டாரின் புறக்கணிப்பிற்கு உள்ளாக நேரிடும்."

"இந்திக்காரர்களுக்கு ஒரு நீதியும், மற்றவர்களுக்கு இன்னொரு நீதியுமாகிய,சரி சமத்துவமற்ற ஒற்றுமை தீயுடன் விளையாடுவதை ஒக்கும்"

இவைபோன்ற கருத்துகள், படித்தறிந்து சிந்திக்க வேண்டியவை.

எளிய, இனிய நடையாதலால் எல்லோரும் படிக்கும் வண்ணம் அமைந்திருக்கிறது.

[கிடைக்குமிடம்: நியு ஜஸ்டிஸ் பதிப்பகம், முத்தியாலு நாயக்கன் தெரு, சென்னை-7. விலை: 30 புதுக் காசுகள்.]

தொழில் துறையில்...

[11-ம் பக்கத் தொடர்ச்சி]

சுமார் 70 கோடி ரூபாய் மதிப்புள்ள இத் திட்டத்திற்கு இரண்டாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 52 கோடி ரூபாய் செலவழிக்க திட்டக்குழு தீர்மானித்துள்ளது. ஆனால், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் தன்னுடைய நான்காம் ஆண்டு பருவத்தில் இருந்தாலும், இதுவரை சுமார் 15 கோடி ரூபாய்தான் நெய்வேலித் திட்டத்திற்கு செலவாகியிருக்கிறது! செலவழிக்கும் சக்தி படைத்த டெல்லி நம்முடைய கண்களிலே மண் தூவுகிறது என்பதற்கு இதுவே ஒரு சான்றாகும்!

அழும் குழந்தைக்கு வெறும் உறிஞ்சும் இரப்பரைத் தர, பசியால் வாடும் குழந்தை அதையே வாயில் வைத்து உறங்குவதைப் போல, திராவிடத்தின் உரிமை வேகத்தைக் குறைக்க காகிதத் திட்டமாக நெய்வேலித் திட்டம் விளங்குகிறது. ஆனால், வடநாட்டிலோ திட்டமிடப்பட்டு ஒதுக்கிய தொகையைவிட அதிகமாக செலவழிக்கப்படுகின்றது; இரும்பு உருக்குத் தொழிற்சாலைகள் விரைவாக நிர்மாணிக்கப்படுகின்றன. வடநாட்டில் மின்சார இரயில் பாதைகள் அமைக்கும் வேலைகள் துரிதமாய் நடைபெறுவதோடு, நிர்ணயிக்கப்பட்ட தொகைகளைக் காட்டிலும் கூடுதலாகவே செலவழிக்கப்படுகின்றன. ஆனால், தென்னாடு என்றால் திசை திரும்பிவிடுகிறது; நிலைமை மாறிவிடுகிறது. இந்தக் கொடுமையை காங்கிரஸ் அமைச்சர்கள் சுகமாக அனுபவித்து, திராவிடத்துக்கு தீமைகளைத் திரட்டித் தருகின்றனர்.

இரண்டாண்டு காலத்திற்கு முன்னர், எகிப்தில் நைல் நதியைத் தடுத்து அஸ்வான் அணைக்கட்டை உருவாக்க நாசர் திட்டமிட்டார். அணைக்கட்டு நிர்மாணிக்க ஆகும் செலவில் ஒரு பகுதியைக் கடனாக வழங்குவதாக அமெரிக்க சர்க்கார் வாக்களித்தது. அஸ்வான் அணைக்கட்டு கட்டி முடிக்கப்பட்டால் எகிப்து நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சி பெறும்; விவசாயம் செழிப்புறும்; எகிப்திய மக்கள் திட்டம் விரைவில் நிறைவேறும் எனும் மகிழ்ச்சியில் திளைத்திருந்தனர். அமெரிக்க சர்க்காரோ நாசரின் வெளி நாட்டுக் கொள்கை பிடிக்காததால் வாக்களித்த கடன் தொகையைத் தரவில்லை...!

அமெரிக்க சர்க்காரின் அந்த நம்பிக்கைத் துரோகத்தால் எகிப்தியர்களின் ஆவல் நாசமாகக் கூடாது என்பதற்காகவும், ஏகாதிபத்திய ஆணவக்காரர்களுக்கு நல்ல பாடம் கற்பிப்பதற்காகவும் சூயஸ் கால்வாயை தேசிய மயமாக்கி, அதன் வழி வரும் வருமானத்தால் அஸ்வான் அணைக்கட்டை உருவாக்க வழிகண்டு ஆவன செய்தார், நாசர். இதன் விளைவாக பயங்கரமான போர் மூண்டதையும், எகிப்து தன்னுரிமையை நிலைநாட்டிக் கொண்டதையும் யாவரும் அறிவர். ஒரு அணைக்கட்டு உருவாக எகிப்தின் தலைவர் நாசர் எதையும் செய்ய முனைந்ததும், எகிப்திய மக்கள் துணிந்து உறுதியாய் அதற்கு ஈடுகொடுக்க முன்வந்ததும் நமக்குப் புத்துணர்ச்சியை நல்லார்வத்தை நல்குகின்றது.

ஆனால், இன்றைக்கு (இந்திய) வடநாட்டு ஏகாதிபத்திய சர்க்கார் தென்னாட்டைப் பொறுத்த மட்டில் சொல்வதொன்று; செய்வது மற்றொன்று! காங்கிரஸ் அமைச்சர்களோ தட்டிக் கேட்கத் தைரியமின்றி, தாளம் போடுபவர்களாய், தலையாட்டுபவர்களாய் இருக்கின்றனர். நாசர் அந்நிய சர்க்காருக்குப் புத்தி கற்பிக்கிறார். சொந்தம் பாராட்டிப் புகழ்பாடும் காமராசர் இந்திய சர்க்காருக்கு எதையும் அறிவுறுத்துவதில்லை — இத்தகைய அடிமை நிலைமையாலும், தேசியப் போர்வையாலும் திராவிடம் தொழில் அபிவிருத்தியில் தன்னுரிமை இழந்து வாடுகிறது. நிலக்கரி உற்பத்தியின் நிலைமை இந்தச் சோகத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறது. சோகமும் சோபிதமாகும், திராவிடம் விடுதலை பெற்றால்! அந்தச் சுந்தரச் சுதந்திரத்தைப் பெற உறுதி கொள்வோமாக!

தலைமை நிலையச் செய்தி

கிளைக் கழகச்
செயலாளர், அமைப்பாளர்
ஆகியோருக்கு வேண்டுகோள்

★

பொதுச்செயலாளர் அவர்கள் அறிக்கைப்படி உறுப்பினர்கள் சேர்ப்பதற்கான பதிவுத்தாள்கள் எல்லா மாவட்டங்களுக்கும் தேவையான அளவு தலைமைக் கழகத்திலிருந்து அனுப்பப்பட்டிருக்கின்றன.

மாவட்டக் கழகங்களின் பொறுப்பில் வட்டக் கிளைச் செயலாளர்கள் அல்லது வட்டப் பொறுப்பாளர்கள் மூலம் எல்லாக் கிளைகளுக்கும் தாள்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன.

கிளைக் கழகச் செயலாளர்கள் தங்கள் தங்கள் வட்டத்திற்கான வட்டக் கிளைச் செயலாளர் அல்லது வட்டப் பொறுப்பாளர்களிடம் உடனடியாகத் தாள்கள் பெற்று உறுப்பினர் பதிவு செய்யக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

உறுப்பினர் சேர்ப்பதற்கான இறுதி நாளாகப் பொதுச் செயலாளர் அவர்களால் 30—6—59 வரையறுக்கப்பட்டிருப்பதை கிளைக் கழகச் செயலாளர்கள் அனைவரும் நினைவு கூரக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்டக் கழகம் அல்லது மாவட்டக் கழகத்தால் குறிப்பிடப்பட்டுள்ள வட்டக் கிளைச் செயலாளர்கள் அல்லது நியமிக்கப்பட்டுள்ள அந்தந்த வட்டப் பொறுப்பாளர்கள் ஆகியோரிடம் மட்டுமே உறுப்பினர் பதிவு விண்ணப்பத்தாள்களைப் பெறுமாறு கிளைக் கழகச் செயலாளர்கள்—அமைப்பாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுவதுடன், தாள்களைக் கோரி தலைமைக் கழகத்திற்கு எழுத வேண்டாமெனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறார்கள்.

உறுப்பினர் பதிவுசெய்யப்பட்ட தாள்களையும்—அவைகளுக்குரிய கட்டணத் தொகையையும் நேரடியாகத் தலைமைக் கழகத்திற்கே அனுப்பிவைக்க வேண்டுமெனக் கிளைக் கழகச் செயலாளர்கள், அமைப்பாளர்கள் அறிவிக்கப்படுகிறார்கள்.

30—6—59-ஆம் நாளுக்குள் உறுப்பினர்களைச் சேர்க்கும் பணியில் துரிதத்தையும் ஆர்வத்தையும் காட்டிப் பணியாற்றுமாறு சம்பந்தப்பட்ட எல்லாத் தோழர்களையும் தலைமைக்கழகம் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறது.

நில் நண்பா...

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

தமிழ: ....

தி. மு. க: ஏன் மௌனம்? வெளிநாட்டு அரசியலிலும் அறிவு பூஜ்யம்; உள் நாட்டரசியலிலும்......

தமிழ: ஆங்........அதைப்பற்றி ஒன்றும் கூறாதீர்கள். 'தமிழன், தமிழ் இனம்' என்ற இன உணர்ச்சியை ஊட்டியதே நாங்கள்தானே?

தி. மு. க: ஆமாம். ஆமாம், 'தமிழ் நாடு தமிழருக்கே' என்ற முழக்கம் கிளம்பியபோது 'எலிவளை எலிகளுக்கே' என்று கிண்டல் செய்த நீங்களா தமிழுணர்ச்சிக்கு வழி வகுத்தீர்கள்?

தமிழ: ....

தி. மு. க: தமிழ்ப்பெருந் தலைவர்களெல்லாம், வானொலி என்ற அழகு தமிழ்ச் சொல்லிருக்கும்போது 'ஆகாஷ்வாணி' என்ற தமிழின் தன்மானத்தைக் கொன்றழிக்கும் வட சொல் வேண்டாம் என்று கூறி வானொலி நிலையத்தில் பேசுவதை நிராகரிக்கும்போது, அவர்களையெல்லாம் 'விளம்பரதாரிகள்' என்று பத்திரிகையில் எழுதியதோடல்லாமல், 'ஆகாஷ்வாணி'யில்பேசிய நீங்களா தமிழுணர்ச்சியை வளர்ப்பவர்கள்? கொஞ்ச நாட்களுக்குமுன் "ஆகாஷ்வாணிப் போராட்டம் நம் சக்தியை வீணாக்கும்—விரையமாக்கும்." என்று எழுதி விட்டு—பின்னர் தமிழரின் கோரிக்கையான 'ஆகாஷ்வாணி'ப் போராட்டத்திற்கு எல்லாக் கட்சித் தலைவர்களும் கூடிக் கலந்து ஆலோசிக்க வேண்டும் என்று 'விளம்பரம் தேடும்' ஆலோசனையை வைத்த நீங்களா தமிழுணர்ச்சியை வளர்ப்பவர்கள்? ஏன் மௌனம்? ஏன் திரும்பி நடக்கிறாய்? நில், நண்பா எங்கே ஓடுகிறாய்?

‘உழைப்பின் வெற்றி’ இப்படி ஒரு சிலையுண்டு, சென்னைக் கடற்கரையில்! அந்தச் சிலையை வைத்து—கேரள நாட்டின் நிலையை வைத்து—‘இந்திய அரசாங்கம்’ ஒரு தபால் தலை போட்டால் எப்படியிருக்கும் என்பதைக் காட்டுகிறது இந்தப் படம்! நாயர் கட்சி, புரட்சி சோஷலிஸ்ட், பிரஜா சோஷலிஸ்ட், காங்கிரஸ் ஆகிய கட்சிகள் பலாத்காரக் ‘கன்னக்கோல்’ போட்டு ஆட்சியாளரைக் கவிழ்த்திட முயற்சிக்கும் காட்சி ‘உழைப்பின் வெற்றி’யைக் காட்டவில்லை; ஜனநாயகம் எனும் குழந்தையின் ரத்தத்தை உறிஞ்சுபவரின் வெற்றியைக் காண்பிக்கிறது.

“வீட்டுக்கு ஒரு பிள்ளை தேவை; நாட்டைச் சூழ்ந்த கேட்டை நீக்க!”—என்று பெருங் குரலில் கூவுகின்றன, நாயர் சொசைட்டியும், ஈழவர் சமுதாயச் சங்கமும், கிறித்துவ மிஷினரிகளும்!

இத்தனை ‘வகுப்புவாத ஸ்தாபனங்களுக்கும்’ ஆக்கமும் ஊக்கமும் ஊட்டி வருகிறது, ‘காங்கிரஸ் மகாசபை’!

இப்படிப் ‘போர்க் கள’மாகி நிற்பது கேரளம்! கம்யூனிஸ்ட்டுகள் ஆட்சிபீடத்தை அலங்கரிக்கும் கடற்கரையோர நாட்டில் தான் இந்த ‘அமளி’ எழுகிறது!

கம்யூனிஸ்ட் ஆதரவாளர்களின் சங்கத்திற்கு முன் மறியல்!

கலகம் — பின்னர் கண்ணீர்ப் புகைப் பிரயோகம்!

கல்வீச்சு—போலீசாரின் துப்பாக்கிப் பிரயோகம்!

அதைத் தொடர்ந்து...

ரத்த ஆறு! பிணமலை! மரண ஓலம்!

‘ஜனநாயகத்தின் முன்னோடிகள்; சீலமிகுந்த காந்தியத்தின் காவலர்கள்; அகிம்சா வீரர்கள்; அறப்போர் தீரர்கள்—என்னும் புகழாரத்தை அணிந்து கொண்டிய பரிதாபகரமான நிலை வந்தது! அப்போதும் ‘கலவரங்களுக்கு’ அடிப்படைக் கல்லாக, சூத்திரதாரியாக விளங்குகிறது!

ஐந்து பிணங்கள்! ‘ஐயோ!’ என்று கதறி வீழ்ந்திருப்பார்கள் உறவினரும், மனைவிமாரும்!

“காங்கிரஸை நம்பினான் கணவன்; இன்று கல்லறைக்குள்ளே கிடக்கிறான்! நல்ல கொள்கைக்காவது இறந்தானா? சீச்சீ! ‘வகுப்புவாதம்’ என்று இதுவரை தூற்றிக் கொண்டிருந்த தீய கொள்கைக்காக செத்தானே!”—என்று ஊரார் ஏசுவர், கணவனை இழந்து கண்ணீர் வடித்து நிற்கும் பெண்ணைப் பார்த்து!

“மகனைப் பறிகொடுத்த மாதா, அதோ, புலம்பித் தவிக்கிறாள் பாரீர்! புத்திரனைப் பறிகொடுத்த சோகம், அவளைப் பைத்தியக்காரியாக்கிவிட்டது! இத்தனைக்கும் அவள் மகன் செத்தது எதற்காக? நீதி வழுவாத நேர்மைக்காகவா? இல்லை; இல்லை! பொறுமைப் பேய்கள் கட்டி வைத்த அமைதியின் சமாதியைத்தான் கழுவப் பயன்பட்டுவிட்டது. அவன் அழுதழுது கொட்டிய

பேசி வந்த காங்கிரஸ், கேரளத்திலும், கன்னித் தமிழகத்தின் தலைநகராம் சென்னையிலும் ஆட்சிபீடத்தைக் கோட்டை விட்டது; எதிர்க்கட்சியாக இயங்கும் பரிதாபகர நிலை பெற்றது!

இப்போது ‘காங்கிரஸ்’ எதிர்க்கட்சியாக இயங்குவதற்கும் இலாயக்கில்லை என்ற முடிவை ‘கேரளத்தில் விழுந்த பிணங்கள்’ நிரூபித்துவிட்டன.

அறப்போர் முறையில்—ஜனநாயக முறையில்—தேர்தல் முறையில்—ஒருஅரசாங்கத்திற்குத் தன் எதிர்ப்பைத் தெரிவிக்க முடியாத—தெரியாத நிலையடைந்து ‘எதிர்க்கட்சிக்கும் நாங்கள் இலாயக்கற்றவர்கள்’ என்ற உண்மையைச் சொல்லாமல் சொல்லிவிட்டார்கள், அங்கு!

இந்தக் கொடிய நிலைமை அங்கு ஏற்படுவதற்கு முன்னால்—‘நேரடி நடவடிக்கை’யில் காங்கிரஸ் இயக்கம் ஈடுபடுவதற்கு முன்னால்—டெல்லி மூலபீடத்தில் இருக்கின்ற காங்கிரஸ் பெருந் தலைகள் அத்தனை பேரும் கேரளத்தை வட்ட மிட்டார்கள். அப்போதெல்லாம் அவர்கள் எழுப்பிய முழக்கம், பின்னால் இத் நச்சு மரங்களாக மாறிவிட்டன அங்கே!

‘கம்யூனிஸ்ட் சர்க்காரை விரட்டத்தான் வேண்டும்’ என்ற ஒரே குறிக்கோளுடன் காங்கிரஸ் துவங்கிவிட்ட இத்தகைய துரோகச் செயல் குறித்து உலகமே சிரிக்கிறது!

எதிர்க் கட்சிகளை நோக்கி எத்தனையோ ஜனநாயக விளக்கங்களை எல்லாம் தந்திருக்கிறார்கள், அவர்கள்! சட்டத்தின் புனிதத் தன்மைகளைக் காத்து வளர்க்க வேண்டிய விதிமுறைகளை எப்படி எல்லாமோ போதித்திருக்கிறார்கள், அந்த அகிம்சா பித்தர்கள்! போராட்டத்தின் பயங்கர விளைவுகளை எப்படியெப்படி எல்லாமோ சித்தரித்து, ‘சிந்திக்கக் கற்பீர்’ என்று புத்திமதி சொல்லியிருக்கிறார்கள் அந்த சித்தார்த்தனின் வாரிசுகள்!

ஆனால், அந்தோ பரிதாபம்! அத்தனையையும் இன்று கேரளத்திலே பொய்ப்பித்துக் காட்டி விட்டார்கள்!

“எதிர்க்கட்சிகள் ஏன் நடத்த வேண்டும் போராட்டம்? அத்தகைய போராட்டங்களினால் என்ன

வளம் கொழிக்கும் சேரநாடு - அங்கு களபலியான பொருள்—‘ஜனநாயகம்’!

காங்கிரசார் ஆதரவில்தான் இந்த ‘அமைதியின்மை’ ஏற்படுகிறது.

காங்கிரசாரின் இந்தப் போக்கைக் கண்டு நல்லவர் சீறுகின்றனர்; நாட்டு மக்கள் ‘காங்கிரஸ் என்றாலே பயங்கரவாதிகளின் பண்ணை’ என்று நினைக்கவும் ஆரம்பித்து விட்டார்கள்.

அங்கு காங்கிரஸ் ஆளும் கட்சியாய் வீற்றிருக்கும்போது அதன் ‘ரத்தப்பசி’ தீரவில்லை; ‘இருதயங்களைப் பிளந்து தின்னும்’ ஆசை தணியவில்லை!

எனவே, பல பிணங்கள் விழுந்தன; எண்ணற்ற பெண்களின் வாழ்வு பிடுங்கப்பட்டது.

துப்பாக்கிகளுக்குத் தீனி போடுவதிலேயே தங்கள் பதவிக் காலத்தை பயன்படுத்திக் கொண்டனர்!

பதவிக் காலம் முடிந்தது! எதிர்க் கட்சியாக அமர வேண்டு குருதி வெள்ளம்!”—என்று இகழ்ந்துரைப்பார்கள், மற்றவர்கள்!

ஆமாம்; அவர்களின் ‘தியாகத்’திலே கறை படிந்துதான் காணப்படுகிறது! விழலுக்கு இரைத்த நீராகத்தான் போய் விட்டது, அவர்களைப் பறிகொடுத்தவர்கள் சிந்துகின்ற கண்ணீர்!

இப்படிப்பட்ட நிலையை உண்டாக்கி மேலும் போர் முரசு தட்டுகிறது காங்கிரஸ்; பயங்கரவாதத்தில் வெற்றி காண ‘பஞ்சசீலத்தினர்’ சங்கொலி எழுப்புகின்றனர்.

“ஆளும் கட்சி எம்முடையதே! ஆளும் திறமை படைத்தவர்கள் நாங்களே! ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் காங்கிரசை அசைக்க முடியாது. இன்னும் முப்பது ஆண்டுகளுக்கு!” என்று வீராப்புடன் தகைய பேரிடிக்குத்தான் அடிக்கல்லாக அமைக்கப்பட்டது போலும்!

“அராஜகத்தின் ஆணிவேரே கேரளத்தில்தான் ஓடுகிறது!”—என்றார் தேபர்!

“மக்கள் அனைவரும் மாபாதகர்களின் ஆட்சிச் சக்கரத்தில் சிக்கிச் சீரழிகிறார்கள்!”—என்றார் மொரார்ஜி தேசாய்!

“பொதுவுடமைத் தோழர்கள் மக்களின் உயிருக்கும் உடமைக்கும் உலை வைத்துவிட்டார்கள்!”—என்று புலம்பினார், இந்திரா காந்தியார், காங்கிரசின் தலைமைப் பீடத்தில் ஏறி அமர்ந்த மறுகணமே!

இப்படி கொஞ்சம் கொஞ்சமாக அவர்கள் தூவிய விஷ வித்துகள்தான் இன்று கொத்தப்பட்ட அங்கங்களும், வெட்டப்பட்ட தலைகளும் தொங்குகின்ற சாதித்துவிட முடியும் என்று கருதுகிறீர்கள்? இருக்கவே இருக்கிறது தேர்தல்! மக்களிடம் ஓடுங்கள்; அவர்களின் இருதயத்திலே நல்ல இடத்தைத் தேடுங்கள்; ‘போடுங்கள் எங்களுக்கு ஓட்டு’ என்று புலம்புங்கள்; உங்கள் சேவைகளின் பட்டியலை விரித்துக் காட்டுங்கள்! மக்களும் நல்ல தீர்ப்பு வழங்கி விடுவார்கள், உங்களிடம் நம்பிக்கை இருந்தால்!”

—இத்தகைய அறிவுரைகளைத் தந்தவர்கள்தான், காங்கிரசார்!

‘மூன்று முனைகளிலே போராட்டமாம்; பலனென்ன கண்டார்கள் அதனால், பைத்தியக்காரர்கள்! ஐந்து ஆண்டு பொறுத்திருங்கள்! ஜனநாயக முறையிலே தேர்தல் களத்திலே சந்திப்போம்! மக்கள் வரவேற்றால்—மந்திரி சபை அமைத்தால்—

[தொடர்ச்சி பக்கம்—10]

புரட்சி நடிகர் விபத்தில் சிக்கினார்!

சீர்காழியில் சென்ற 15-6-59 அன்று நாடகத்தில் நடித்துக் கொண்டிருந்தபோது, புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள் விபத்துக்குள்ளானார்கள். நாடகத்தில் ஒரு சண்டைக் காட்சியில், நடிகர் ஒருவரைத் தூக்கியெறியும் நேரத்தில் இந்த எதிர்பாராத விபத்து ஏற்பட்டது. அதன் காரணமாக அவரது இடதுகால் எலும்பில் முறிவு ஏற்பட்டுவிட்டது. உடனடியாக சென்னை கொண்டு வரப்பட்ட புரட்சி நடிகர், இப்போது தனியார் மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கிறார். உடல் பூரண நலம் பெற கிட்டத்தட்ட மூன்று மாத காலமாவது ஆகும் என்று மருத்துவர்கள் கருதுகின்றனர்.

பூ முடித்தவள்

சென்றவாரம் பரணி ஸ்டுடியோவில் பாரதி பிலிம்சாரின் 'பூ முடித்தவள்' துவக்க விழா நடைபெற்றது. அந்த விழாவிற்கு வழக்கறிஞர் வி. பி. ராமன் தலைமை வகித்தார். பரணி அதிபர் ஏ. எல். சீனிவாசன் காமிராவை முடுக்கி வைத்தார். கவிஞர் கண்ணதாசன் கதை வசனம் எழுதியிருக்கிற இப்படத்தை அவரே 'டைரக்ட்' செய்வார் என்று முன்பு அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இப்போது அந்தப் பொறுப்பை வேறு டைரக்டரிடம் ஒப்படைக்க இருப்பதாகச் செய்தி கிடைத்திருக்கிறது.

மகனே; கேள்!

நாவல் பிலிம்சார் தயாரித்து வந்த இந்தப் படம் இப்போது மீண்டும் வேலைகள் துவக்கப்பட்டு, விரைவில் திரையிடப்படுவதற்கான இறுதிக் கட்டத்தை அடைந்திருக்கிறது. திராவிட நாடு துணையாசிரியரும், இயக்கத்தின் முன்னணி வீரருமான இராம. அரங்கண்ணல் கதை வசனம் அமைத்திருக்கும் இந்தப்படத்தில் இலட்சியநடிகர் ராஜேந்திரன், பத்மினி பிரியதர்சனி, எஸ். வி. சுப்பையா—ஆகியோர் திறம்பட நடித்திருக்கின்றனர். வி. சீனிவாசன் டைரக்ட் செய்கிறார்.

சைனா பஜார்

ரேணு பிலிம்ஸ், செந்தில் பிலிம்ஸ் சார்பில் 'சைனாபஜார்' எனும் படம் தயாரிக்கப்பட்டு வருகிறது. இதற்கான கதை வசனத்தை ரவீந்தர் எழுதுகிறார். இப்படத்தில் சிவாஜி கணேசன், வி. ஆர். ராஜகோபால், மாலினி முதலியோர் நடிக்கின்றனர். டி. ஆர். பாப்பா இதற்கு இசை அமைத்து வருகிறார்.

சென்னையில் யுகோஸ்லேவிய பிலிம் விழா

யுகோஸ்லேவிய நாட்டின் சிறந்த திரைப் படங்களில் சில சென்னை நகரில் நடக்கவிருக்கும் "யுகோஸ்லேவிய சினிமா விழா'வில் திரையிடப்பட இருக்கின்றன.

யுகோ நாட்டுப் பிரதிநிதி இதற்கான ஒத்துழைப்பைத் தருவதோடல்லாமல் இவ்விழா மிகச் சீரும் சிறப்புடனும் நடந்திட வேண்டுமென விரும்புகிறார். அவர் விருப்பம் நல்ல முறையில் நிறைவேறிட 'சென்னை பிலிம் சொசைடி' ஆவன செய்து வருகிறது.

இந்த விழா நடைபெறும் இடம், சென்னை மவுண்ட் ரோடிலுள்ள குழந்தைகள் தியேட்டர் ஆகும்.

இராம. அரங்கண்ணல் எழுதிய நாவல் பிலிம் சாரின் 'மகனே, கேள்!' என்ற திரைப் படத்தில் இப்படித் தோன்றுகிறார், எஸ்.வி. சுப்பையா.

அறிஞர் அண்ணாவின் "காதல் ஜோதி"

அறிஞர் அண்ணாவினுடைய எழுத்தோவியமான "காதல் ஜோதி"யும் இப்போது திரைப் படமாகிறது. கலைவாணர் பிலிம் சார் தயாரிக்கும் அப்படத்தின் முதற் படப்பிடிப்பு வருகிற 26—6—59 அன்று நடைபெறப் போகிறது. அன்று, கதையில் 'பொன்னனை'க நடிக்கும் நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி நடிக்கின்ற பகுதி ஒன்று படமாக்கப்படும்.

கவலையில்லாத மனிதன்

கண்ணதாசன் புரொடக்ஷன் சார் தங்களுடைய மூன்றாவது தயாரிப்புக்கு இந்தப் பெயரைச் சூட்டியிருப்பதோடு, படத்தின் துவக்க விழாவையும் 14-6-59 அன்று நடத்தினார்கள். முன்னாள் சென்னை மாநில நீதிபதி திரு. எஸ். ஏ. ஐயாசாமி அவர்கள் தலைமையில், நகரத் தந்தை அ. பொ. அரசு அவர்கள் புதுப் படப்பிடிப்பைத் துவக்கி வைத்தார்.

நகைச்சுவைக்கு முதலிடம் தரப்பட்டிருக்கின்ற இந்தக் கதையின் கதாநாயகர் சந்திரபாபுவாம். மற்றும் டி. ஆர். மகாலிங்கம், டி. எஸ். பாலையா, எம். ஆர். ராதா, எம். என். ராஜம் ஆகியோர் நடிக்க இருக்கின்றார்கள். இதன் கதை வசனத்தை கவிஞர் கண்ணதாசனும், அய்யாப் பிள்ளையும் அமைத்திருக்கிறார்கள். இசையை விசுவநாதன்—ராமமூர்த்தி கவனித்துக் கொள்ள, கே. சங்கர்தான் இந்தப் படத்தையும் டைரக்ட் செய்கிறார்.

விருந்து!

வாசு பிலிம்ஸ் அதிபரான வாசு மேனன் இரண்டாவது முயற்சியாக முரசு பிலிம்ஸ் என்ற நிறுவனத்தை அமைத்திருக்கிறார். இதில் டைரக்டர் சங்கரும், கதாசிரியர் கோபாலகிருஷ்ணனும் கூட்டு சேர்ந்திருக்கிறார்கள். 'விருந்து' என்று பெயர் வைத்திருக்கிறார்கள்.

வளம் கொழிக்கும்...

[9-ம் பக்கத் தொடர்ச்சி]

நினைத்ததை சாதித்துக்கொண்டு விடலாம்!' — இப்படி நம்மை நோக்கி அறிவுரை பகன்றவர்கள் இன்னும் இருக்கத்தான் செய்கிறார்கள் காங்கிரசில்!

தமிழகத்திற்கு ஒரு பேச்சு; கேரளத்திற்கு மற்றொரு பேச்சு; இப்படி மண்ணுக்கு மண் கொள்கை மாற்றும் கொடியவர்களின் கூடாரமாக மாறி விட்டதே காங்கிரஸ் இயக்கம்!

கேரளத்திலே இருக்கின்ற காங்கிரஸ் தோழர்களைப்பார்த்து "வேண்டாம்; பொறுத்திருங்கள் மூன்றாண்டுகள்! பொதுத் தேர்தல் வருகிறது! மக்களின் வாக்கு பெற்று கம்யூனிஸ்டுகளை விரட்டி விடுவோம்!" என்று சொல்ல ஒரு காங்கிரஸ் தலைவருமா கிடைக்கவில்லை?

கொடுமையிலும், கொடுமை! ஜனநாயகம் தழைத் தோங்கும் நாட்டிலே போராட்டத்திற்கு இடமில்லை என்று சொன்னவர்கள்தான் இன்று கச்சை கட்டிக் களம் குதித்திருக்கிறார்கள்!

அந்த ஆவேசத் தீயினால் இதுவரை ஐந்து உயிர்கள் கருகி விட்டன!

இனி எத்தனை உயிர்கள் பாரத மாதாவின் ஜனநாயகக் கத்திக்கு இரையாகப் போகின்றனவோ; யார் கண்டது? ⁖



தமிழ்நாடே கிடுகிடுத்தது!

'நான் ஏன் நாத்திகன் ஆனேன்?' என்ற பகவத் சிங்கின் நூலை மொழிபெயர்த்த அந்தத் 'தமிழர்' கைது செய்யப் பட்டதால் அன்றைய தமிழகம் அமைதி இழந்தது!

"யாரிந்தத் தமிழர்?"—இந்தக் கேள்வி அன்றைய அரசியல் தலைவர்களின் உள்ளத்தில் பீறிட்டெழுந்தது!

பெயரைக் கேள்விப்பட்டார்கள்! பேராச்சரியம் அடைந்தார்கள்! 'இவர் ஏன் பெயரை இப்படிச் சிதைத்துக் கொண்டார்?' மறுபடியும் அந்தத் தலைவர்கள் குழப்பத்தில் ஆழ்ந்தார்கள்!

சீவானந்தன் — இப்போதைய ஜீவானந்தம்தான் அவர்களை அப்படிக் குழப்பத்தில் ஆழ்த்திய பெயர்!

அவர் மேடையேறினால் ஒலி பெருக்கி கதறும்; தமிழ் நடனமாடும்; தொல்காப்பியர் தலை நீட்டுவார்; இளங்கோ வருவார்; கம்பர் கூத்தாடுவார். கம்யூனிஸ்ட் கூடாரத்திற்குள்ளேயே 'தமிழறிந்த பெருமாளாக'க் கருதப்படுபவர்!

இத்தனை புகழாரங்களை கொண்ட ஜீவாதான் 18-6-59—ந் தேதி மாலை பேசப் போகிறார்!

எங்கு? தமிழாராய்ச்சிக் கழகத்திலா?

இல்லை!

தமிழர் தன்மானத்தை — மொழிப் பெருமையைக் களபலி வைத்து தமிழ் நாட்டில் வெறியாட்டம் போடும் 'ஆகாஷ் வாணி'யை எதிர்த்தா?

இல்லை; இல்லை!

'ஆகாஷ்வாணி' எனும் வெறிக் கூச்சலை அடிக்கடி எழுப்பிடும் வானொலியில்தான் பேசப் போகிறார், 'ஷெய்குத் தம்பிப் பாவலர்' எனும் தமிழ்ப் புலவரைப்பற்றி!

ஜீவானந்தம் எனும் தன் பெயரை மாற்றி சீவானந்தன் என்று ஆரம்ப காலத்தில் எழுதி வந்தவர் —

'தமிழ்! தமிழ்!!' — என்று அடிக்கடி வாய் மணக்கப் பேசிக் கொண்டிருப்பவர் —

தமிழ்எழுத்துலகில் 'யதார்த்த முற்போக்குப் பரம்பரையை' உண்டாக்கித் தலைமை தாங்கி வருபவர்—

ஒரு தமிழ்த் தினத்தாளுக்கும்—ஒரு திங்கள் 'தமிழ் இலக்கிய' இதழுக்கும் ஆசிரியராய் இருப்பவர்—தமிழரின் மொழிப் பெருமையை, தனித் தன்மையை அழிக்கும் 'ஆகாஷ்வாணி'யில் பேசியது ஏன்?

தமிழ்ப் பெருந் தலைவர்கள் வெறுத்தொதுக்கிய இழி செயலை விரும்பி ஏற்றுக்கொண்டது?....

ஏன்?...ஏன்?...

சிலம்பு

தொழில் துறையில் துரோகம்:

		1954-ல் உற்பத்தி (இலட்சம்	1960-ல் உற்பத்தி டன்களில்	அதிகம் கணக்கு)
1.	அஸ்ஸாம்	5	5	...
2.	மேற்கு வங்காளம்			
	டார்ஜிலிங்	3	3	....
	ராணிகஞ்ச்	122.2	181.6	59.4
3.	பீகார்			
	ஜாரியா	131·9	166·9	35
	காரன்பூரா	14·4	60	45·6
	பொக்காரா	23·8	28·8	5
	கிரிடி	2·6	2·6	...
	சிறு சுரங்கங்களில்	1·4	1·4	....
4.	மத்தியப் பிரதேசம்			
	சிந்த்வாரா, சந்தா	22·5	22·5	....
	கோர்பா	....	40	40
	சாஸ்தி	·7	·7	...
	மத்திய இந்திய நிலக்கரிச் சுரங்கங்கள்	23·7	53·1	30
5.	ஒரிஸ்ஸா	5·2	5·2	...
6.	ராஜஸ்தான் பிக்கானிர்	·3	·3	...
7.	ஆந்திரா சிங்கரேணி	14·3	29·3	15
	ஆக	367·7	597·7	230

கொட்டிக் கிடக்குது கனிச்செல்வம்; வெட்டி எடுக்க வலிவில்லை!

தொழில்கள் செழிப்புடன் வளர்ந்தோங்க நிலக்கரியும், மின்சாரமும் அடிப்படைத் தேவைகளாகும். தொழில்கள் நடைபெற அணுசக்தி நல்ல முறையில் பயனாகும்வரை நிலக்கரியும், மின்சாரமும் தொழில்களை இயக்கும் சக்திகளாகத் தொடர்ந்து முக்கியத்துடன் திகழ்ந்துவரும். இந்நிலைமையை உணர்ந்ததின் விளைவாகவே நிலக்கரியைக் கறுப்புத் தங்கம் என்று வர்ணிப்பர்.

பல்வேறு தொழில்களுக்கு எரிபொருளாகவும், கச்சாப் பொருளாகவும் நிலக்கரி பயன்படுகின்றது. இரயில்கள், இரும்பு உருக்குத் தொழிற்சாலைகள், மின்சார உற்பத்தி நிலையங்கள், சிமெண்ட் தொழிற்சாலைகள், காகித ஆலைகள், பருத்தி ஆலைகள், கப்பல் கட்டும் தளங்கள் — இத்தகைய சிறப்பான தொழில்கள் நடைபெற நிலக்கரி அடிப்படைத் தேவையாகும். இவ்வாறு நிலக்கரி, தொழில் வளர்ச்சிக்கு ஊன்றுகோலாய்த் துணை புரிகிறது!

கற்பனை இல்லையெனில் கவிதை முகிழ்க்காது; அன்பு இல்லையெனில் இல்லறம் இனிக்காது; நிலக்கரி இல்லையெனில் தொழில் வளர்ந்தோங்காது.

இப்படி சிறப்புகள் பெற்ற நிலக்கரி திராவிடத்து மண்ணில் நிறையப் புதைந்திருந்தாலும் வெட்டி எடுக்கப்படாமல் வீணாய் கிடக்கிறது. தொழில்கள் சிறப்பாய் வளர முதற் தேவையான எரி பொருளாம் நிலக்கரியைத் தோண்டியெடுக்கும் முயற்சியே சரிவர இல்லையெனில் திராவிடம் தொழில் துறையில் முன்னேற்றங் காணும் நிலைமை உருவாவது எளிதல்ல.

தமிழகத்து நெய்வேலியில் நிலக்கரி எடுக்கும் வேலை துரிதமாக நடைபெறவில்லை. இந்தியத் துணைக் கண்டத்தை விட்டு வெள்ளை ஏகாதிபத்தியம் வெளியேறுவதற்கு முன்னரே நெய்வேலியில் பழுப்பு நிலக்கரி எடுக்கும் திட்டம் தீட்டப்பட்டு, வேலையும் துவங்கப்பட்டது. என்றாலும், இன்றுவரை துவளாமல் விரைவான வகையில் நெய்வேலித் திட்டம் நிறைவேற்றப்படவில்லை.

ஆந்திர நாட்டு சிங்கரேணி நிலக்கரிச் சுரங்கம் நன்கு விரிவுபடுத்தப்பட நிறைய வாய்ப்புகள் மலிந்திருந்தாலும் முன்னேற்றமடைய முயற்சிகள் எடுக்கப்படவில்லை.

இத்தகைய இழிநிலையில் திராவிடத்து நிலக்கரித் தொழில் நலிந்து கிடக்கிறது. ஆனால் வடநாட்டிலோ புதைந்து இருக்கும் நிலக்கரியை வெட்டியெடுக்கும் திட்டங்கள் மளமளவென நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

திராவிடத்தில் சிங்கரேணி நிலக்கரிச் சுரங்கத்தைத் தவிர வேறில்லை; ஆனால் நூற்றுக் கணக்கில் வடநாட்டில் நிலக்கரிச் சுரங்கங்கள் உள்ளன.

1954-ம் ஆண்டில் இந்தியாவில் உற்பத்தியான நிலக்கரி 368 இலட்சம் டன்களாகும். அதனுடைய மதிப்பு 54 கோடி ரூபாயாகும். சிங்கரேணி நிலக்கரிச் சுரங்கத்தில் 14 இலட்சம் டன் நிலக்கரிதான் வெட்டியெடுக்கப்பட்டது. எனவே, பாக்கியுள்ள 354 இலட்சம் டன் நிலக்கரியும் வடநாட்டுச் சுரங்கங்களில் உற்பத்தியானதாகும்.

எனவே, முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் நிலக்கரி உற்பத்தி 1 மடங்கு என்றால் வடநாட்டின் நிலக்கரி உற்பத்தி 26 மடங்குகளாகும்! வடநாட்டில் உள்ள நிலக்கரிச் சுரங்கங்கள் பீகாரிலும், மேற்கு வங்காளத்திலுமே பெரும்பாலும் குவிந்து கிடக்கின்றன என்பதையும் நாம் அறிந்து கொள்ளுவது நல்லதாகும்.

வடக்கு செழித்திருக்க, தெற்கு வரண்டிருக்கும் வஞ்சக நிலையில் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் தீட்டப்பட்டது. பீகாரிலும், மேற்கு வங்காளத்திலும் மட்டிலுமே நிலக்கரிச் சுரங்கங்கள் மண்டிக் கிடப்பதை திட்டக்குழு உணர்ந்தது. அதிகமாய் உற்பத்தியாகும் மேற்கண்ட இரு மாநிலங்களிலிருந்து, நிலக்கரியைப் பயன்படுத்தும் வேறு மாநிலங்களுக்குக்கொண்டு செல்லுவது இரயில்வே நிர்வாகத்தினருக்குப் பெருஞ் சுமையாய் இருப்பதையும் திட்டக்குழு அறிந்தது. எனவே, வாய்ப்புள்ள வேறு மாநிலங்களிலும் நிலக்கரிச் சுரங்கங்கள் வெட்டப்பட்டு அபிவிருத்திகள் செய்யப்படவேண்டும் என தீர்மானித்தது.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 220 இலட்சம் டன்கள் நிலக்கரி அதிகமாக உற்பத்தியாக வேண்டுமென இலட்சிய அளவு நிர்ணயமாகியுள்ளது. பொதுத் துறையில் 120 இலட்சம் டன்கள் உற்பத்தியாக 60 கோடி ரூபாய் செலவாகுமென்றும், தனியார் துறையில் 100 இலட்சம் டன்கள் உற்பத்தியாக 50 கோடி ரூபாய் செலவாகுமென்றும் முடிவாகியது.

நிலக்கரிச் சுரங்கங்கள் பரவலாக அமைதல் வேண்டும் எனும் திட்டக்குழுவின் கொள்கைக்கொப்ப, நிலைமை விளக்கத்திற்கேற்ப, திராவிடத்தில் நிறைய நிலக்கரிச் சுரங்கங்கள் உருவாக இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் வழிவகைகள் செய்யப்பட்டிருக்கும் என எதிர்பார்ப்பது இயற்கையே! ஆனால், வடநாட்டிலே உள்ள மத்தியப் பிரதேசத்தில் நிலக்கரி அபிவிருத்திக்கு ஆவன ஆற்றப்பட்டிருக்கிறதேயொழிய தென்னகமும் நிலக்கரித் தொழிலில் முன்னேற குறிப்பிடத் தக்க அளவில் ஏதும் செய்யப்படவில்லை.

திட்டங்களில் வளர்ச்சி பெறுவது வடக்கு; திட்டக் கொள்கையில் மாறுதல் என்றாலும் இலாபம் அடைவது வடக்கு. எனவே, எந்நிலையிலும் விந்தியத்திற்குத் தெற்கிலும் இந்திய ஒற்றுமை உபதேசிகள் எண்ணுவதுபோல இந்தியா இருக்கிறது; அப்பகுதியும் தக்க வளர்ச்சியுற வேண்டும் என வடக்கத்திய ஏகாதிபத்திய வெறியர்கள் எண்ணுவதில்லை. இதைச் சான்றுகள் தெளிவாய் புலப்படுத்துகின்றன.

இந்திய சர்க்கார் வெளியிட்டுள்ள இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டப் புத்தகத்தில் நிலக்கரி வெட்டி யெடுக்கப்படும் அளவு குறித்து வெளியாகியுள்ள விரிவான விபரம் பக்கத்தில் தனிக் கட்டத்தினுள் தரப்பட்டிருக்கிறது.

எனவே, வடநாட்டில் 215 இலட்சம் டன்கள் அதிகமாக நிலக்கரி தோண்டி யெடுக்கப்பட, திராவிடத்தில் 15 இலட்சம் டன்கள் மட்டுமே நிலக்கரி கூடுதலாக வெட்டி யெடுக்கப்படும். நிலக்கரி உற்பத்தி பரவலாக்கப்படும் என்று கூறுவதெல்லாம் தென்னகத்தைப் பொறுத்த அளவில் பெரும் மோசடியாய் இருப்பதை அறிய முடிகிறது. மேலும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவடையும் 1960—61—ல் திராவிடத்தில் 30 இலட்சம் டன்களும், வடநாட்டில் 567 இலட்சம் டன்களும் நிலக்கரி உற்பத்தியாகும். எனவே, இந்தியாவின் மொத்த நிலக்கரி உற்பத்தியில் 5 சதவிதம்தான் திராவிடத்தின் பங்காகும்.

இயற்கை அன்னை ஏராளமான கனிச் செல்வங்களை திராவிடத்துக்கு வளமாக வழங்கியிருந்தாலும் விடுதலையற்றுக் கிடக்கும் வேதனையால் அவைகள் மண்ணின் மடியிலேயே தவழ்ந்து கொண்டிருக்கின்றன. மக்கட் தொகை ரீதியில் குறைந்தது 25 சதவிதமாவது எல்லா வகை உற்பத்தியிலும் திராவிடத்தின் பங்கு இருந்தாக வேண்டும். ஆனால் நிலக்கரி உற்பத்தியின் பங்கு 5 சதவிதம்தான்! இந்த சோக நிலையில் திராவிடத் தாய் கண்ணீர் வடித்து நிலைகுலைந்து வாடுகிறாள்.

இப்படிப்பட்ட கொடுமை நிலையிலும் நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டம் மையிருட்டில் மின்னலைப்போல் நம்பிக்கை ஒளியை தந்து கொண்டிருக்கின்றது.

[தொடர்ச்சி பக்கம்—8]

காவடியோ காவடி !

★

டில்லிக்குக் காவடி தூக்குவார்கள், இங்குள்ள காங்கிரஸ் மந்திரிகள். நாலு கேட்டால் ஒன்று கிடைக்கும்! கருகிவிட்ட கத்திரிக்காய் போல் முகத்தை வைத்துக் கொண்டு, தோல்விச் சுமை முதுகை அழுத்த ஊர் திரும்புவார்கள்!

அவர்கள் வணங்கும் 'டில்லிப் பகவான்'கள் உலக பாங்கியிடம் கடன் வாங்க அடிக்கடி காவடி எடுப்பார்கள்! நாலு கேட்டால் ஒன்று கிடைக்கும்! இப்போது மறுபடியும் ரயில்வேயிற்காக கடன் கேட்டிருக்கிறதாம், உலக பாங்கிடம்!

இதுவரை வாங்கியது 17 கோடி!

இன்னும் வேண்டும் பலகோடியென மறுபடியும் காவடி!

பதிவு எண்: 7079 16 புதிய காசு

சுழல் விளக்கு

மாலுமி

பஞ்சாட்சரம்; குளத்தூர்.

(?) ஜனநாயகத்தின் 'தொட்டில்' எது?

ஏன்; இந்தியாதான்! ஆனால், தொட்டிலில் கிடக்கும் குழந்தையோ பேச்சற்ற—மூச்சற்ற—பிணம்!

"மலையான்"; சென்னை—1.

(?) நின்று போன இருதயத்தை ஓட்ட புதிய கருவி கண்டுபிடித்திருக்கிறார்களாமே ரஷ்யாவில்—அதற்கு நிறைய கிராக்கி இருக்கலாமல்லவா?

நிச்சயமாக! 'அடுத்த பொதுத் தேர்தல் முடிவுகள் தெரிவிப்பதற்கு முன்னால் அனுப்பிவிடுவதாக இருந்தால், அவைகளில் மூன்னூறு அனுப்பிவையுங்கள்' என்று காமராசரிடமிருந்து முதல் தந்தியே பறக்கலாமே!

பி. கண்மணி; பொறையாறு.

(?) "தி. மு. க. பழுத்த மரமல்ல; அது பட்டுப் போன மரம்!"—என்று கூறினாராமே ஒரு காங்கிரஸ் பெருந்தலை....?

அவருடைய தாக்குதலிலேயே 'தான் யார்' என்பதைக் காட்டிக் கொண்டு விட்டாரே; உங்களுக்குத் தெரியவில்லையா — தோழரே? தி. மு. கழகம் பழுத்த மரமென்றால், அதில் கல்லெடுத்து எறியலாம்! பழுத்த மரத்தில் கல்லெறிவதைத் தவறு என்று கூறமுடியாது. ஆனால், அது பட்டுப் போன மரம் என்று தாக்குகிறார்களே; அதை வாதத்திற்காகவே ஒப்புக்கொண்டாலும், பட்ட மரத்திலே கல் வீசுகிறவர்களை என்னவென்று கூறுவது? நம்மைத் தூற்றுபவர்கள் தாங்கள் 'பைத்தியம்' என்பதை ஒப்புக்கொண்டு விட்டால், நாமும் 'பட்ட மரம்' தான் என்று ஒப்புக்கொண்டு விடலாம், துணிந்து!

'வெண்முகில்'; செங்குன்றம்.

(?) வரி போடுவதற்கு ஏதேனும் பட்டப் படிப்பு வேண்டுமா?

"திராவிட முன்னேற்றக் கழகத்தாருக்கு வரி போடக்கூடத் தெரியவில்லையே!" என்று பரிதாபப்பட்டாராமே கனம் காமராசர்—அவர் ஏதேனும் அத்தகைய பட்டம் படித்திருக்கிறாரா என்று கேட்டுப் பார்க்கவேண்டும். 'காங்கிரஸ்' என்ற சர்வகலாசாலையில், 'இரக்கமின்மை' 'துரோக சிந்தை'. 'சுயநலம்' ஆகிய படிப்புகளில் தேர்ச்சி பெற்றால், அத்தகைய பட்டத்தைத் தருவார்கள் என்று கருதுகிறோம்!

எஸ்.கே. எஸ். துரைபாண்டியன்; அம்பாசமுத்திரம்.

(?) மத்திய மந்திரி ஸ்ரீமாலி விளையாட்டு அபிவிருத்திக்காக இரண்டு கோடி ரூபாயைச் செலவழிக்கப் போகிறாராமே....?

மக்கள் தந்த வரிப்பணத்தைக் கொண்டு விளையாடி வேடிக்கைப் பார்க்கிறது இந்த சர்க்கார்—அவ்வளவுதான்.

டி. பிரேமகுமார்; தேனி.

(?) இந்திய அரசாங்கம் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதாகச் சொல்லிற்றே; அதன் முடிவு என்னவாயிற்று?

ஏன்; இன்னும்கூட அப்படித்தான் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், புள்ளி விபரங்கள் அது வெறும் மோசடி என்று அப்பட்டமாக எடுத்துக் காட்டுகிறது. 1955—56-ல் மத்திய சர்க்காரின் நிர்வாகச் செலவு 94 கோடியாக இருந்தது. சிக்கனத்தைக் கடைப் பிடிக்கத் துவங்கிய பிறகு, 1959-60-ல் என்னவாயிற்று தெரியுமா? 223 கோடி என்று கணக்குக்காட்டுகிறார்கள். இது தான் சிக்கனமா? அது மட்டுமல்ல; செலவைப் பரிசீலிக்க அமைக்கப்பட்ட சிக்கனக் குழுவும் தொடர்ந்து சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கிறது!

(?) திருவாரூர் தேரை இழுக்க இயந்திரத்தைப் பயன்படுத்த முயற்சிக்கப் போவதாக அமைச்சர் பக்தவத்சலம் கூறினாராமே; அப்போது தேர் இழுப்போருக்குத் தொல்லை குறையுமல்லவா?

இயந்திரம்தான் எதற்கு? ஆகாய விமானத்தில் திருவாரூர் 'தியாகேசப் பெருமானை'த் தூக்கி வைத்து பத்து எண்ணி முடிப்பதற்குள் சுலபமாக வீதிகளைச் சுற்றி வந்து விடலாமே! இந்த யோசனையையும் முடிந்தால் அமைச்சரிடம் வெளியிட்டுப் பாருங்கள்.

கரு. இல. கப. செந்தில் நாதன்; கானாடு காத்தான்.

(?) "கூட்டுறவு சாகுபடியை எதிர்ப்பவர்கள் காங்கிரஸை விட்டு வெளியே போகலாம்" என்று நைனிடாலில் பிரதமர் நேரு கோபமாகப் பேசியிருக்கிறாரே; காங்கிரஸ்காரர்கள் என்ன நினைப்பார்கள்?

இனி நினைப்பதற்குஎதுவுமில்லை; நுழைவதற்குத்தான் வாசலைத் திறந்து வைத்துக்கொண்டிருக்கிறாரே சுதந்திரக் கட்சியின் 'பிரம்மா' ராஜாஜி!

கே. அ. கிரி; சென்னை-4.

(?) விடுதலைக்கும் அடிமைத்தனத்திற்கும் இடையே உள்ள இடைவெளி என்ன?

தி. மு. கழகத்திற்கும் காங்கிரசிற்கும் இடையில் உள்ள தூரம்தான்!

பி. பெருமாள்; ஈரோடு.

(?) நாடகத்தில் வருகிற பழைய கால ராஜாவுக்கும் இன்று நம்மை ஆளுகிறவர்களுக்கும் என்ன வித்தியாசம்?

பழைய காலத்து நாடக ராஜா சபை ஆரம்பமானால் "மாதம் மும்மாரி மழைபொழிந்ததா?" என்று கேட்பார். இன்றைய அமைச்சர்களோ "மாதம்முடிந்ததும் சம்பளம் கிடைத்தா?" என்று தங்கள் காரியதரிசிகளைக் கேட்கிறார்கள்.

கே. எம். பி. பாலசுப்ரமணியன்; பெரிய காஞ்சிபுரம்.

(?) ஜூலை முதல் வாரத்தில் மரம் நடு விழா கொண்டாட வேண்டுமென்று டெல்லி அரசு தாக்கீது பிறப்பித்திருக்கிறதாமே; ஏன்?

புரியவில்லையா, உங்களுக்கு? நாட்டிலே பஞ்சம் தாண்டவமாடுகிறது; ஏன்? தேவையான விளைச்சல் இல்லை; ஏன்? வயல்களிலே வளம் இல்லை; ஏன்? போதிய மழை இல்லை; ஏன்?விண்ணிலே கார் மேகங்கள் இல்லை; ஏன்? நிலத்து நீரை ஆவியாகமாற்றிஅனுப்ப மரங்கள் இல்லை! அதனால் தான் மரம் நடச் சொல்கிறார்கள்! இந்த அருமையான ஆராய்ச்சியின் விளைவாகத் தானே கடந்த பத்து ஆண்டுகளாக மரம் நட்டுக்கொண்டிருக்கிறார்கள், மந்திரிமார்கள்! ஆனால் நட்டமரங்கள் எல்லாம் எங்கே என்று மட்டும் கேட்டு விடாதீர்கள். அவையெல்லாம் மனிதனின் உணவுக்குப் பயன் படுவதற்கு முன்னால்,ஆடுமாடுகளுக்கு அன்றாட உணவுப் பொருள்களாகி விட்டன!

பரந்தாமன்; விருதுநகர்.

(?) ஊமைகளைப் பேச வைக்க புதிய வழி ஒன்றைக் கண்டு பிடித்து விட்டாராமே; இங்கிலாந்து தேசத்தில் ஒரு டாக்டர்...?

ஊமைகளாகிய எங்களைப் பேச மட்டுமல்ல; உளறுவாயர்களாகவே மாற்றிவிட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தாரை விடவா அவர் திறமைசாலி?—என்று கேட்கிறார் நமது காமராசர்!

பி. மணி; முகவை.

(?) இலங்கைக்குச் சென்றிருக்கிறாராமே; இந்தியத் தலைவர் ராசேந்திரர்—எதற்காக?

சர்வதேச கலாச்சாரக் கழகத்திற்குக் கல் நாட்ட; புத்தமதப் படிப்பிற்காக வித்யாலங்காரா பல்கலைக் கழகத்தைத் துவக்கி வைக்க; 'டாக்டர்' என்ற கௌரவப் பட்டத்தைப் பேற; இந்தியத் தூதுவர் தந்தவிருந்தை சாப்பிட; ஆயிரக்கணக்கான மக்கள் கொண்ட கூட்டத்தில் முழங்க; 'பஞ்சசீல'த்தைப்பற்றி பறைசாற்ற — இவைகளுக்கு மட்டும்தான் போயிருக்கிறார் தோழரே! அங்கு அல்லலுறும் நமது சகோதரனை ஆட்டிப் படைக்கும் பண்டார நாயகாவை 'ஏன்' என்று தட்டிக் கேட்க அல்ல! அப்படி நப்பாசை கொண்டிருக்கும் உங்களைப் போன்ற இலட்சோப இலட்சம் தமிழர்களின் கண்ணீர்க் கடலிலேதான் இந்தியக் காவலரின் கப்பல் மிதந்து சென்றிருக்கிறது!

வானொலிப் போராட்டம்!

'ஆகாஷ்வாணி'யை மாற்றிவிட வேண்டுமென்று தமிழகமே கொதித்தெழுந்த போதிலும், இன்றுவரை அந்த நேர்மையான கோரிக்கை மதிக்கப்படாமலே இருந்து வருகிறது, மானமற்ற அரசினரால்!

இந்தக் கொடுமையை அனுமதிக்க விரும்பாத தமிழர் சமுதாயம் பலப்பல வழிகளிலே எதிர்ப்பைக் காட்டித் தான் வருகிறது

உயிருக்கு மன்றாடும் உண்ணாத விரதமிருக்கும் வாலிபர்களின் துணிவிற்குக்கூட தூய்மையற்ற நெஞ்சினர் மரியாதை செலுத்தக் காணோம்.

இப்போது தமிழறிஞர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் திருச்சி வானொலி நிலயத்தின் வாசலில் தன் குடும்பத்துடன் மறியல் நடத்தி வருகிறார். ஒரு கிழமை கழிந்த பின்னரும் ஒரு வார்த்தைகூட அரசினரின் உதடுகளிலிருந்து பெயரவில்லை!

இனியும் மௌனம் சாதித்தால், வானொலி நிலையத்தின் வாசலில் இருக்கின்ற பெயர்ப் பலகையை தார் கொண்டு அழிப்பதாக அறிவித்திருக்கிறார் அவர்!

இதன் பிறகாவது மனதிற்கு இதம் தரும் செய்தி கிடைக்குமா—ஆதிக்க புரியினரின் அதிகாரத் திமிர் உடைபடுமா—என்று தமிழகம் எதிர்பார்க்கிறது.

மனிதனின் கதை...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

பான் என விஞ்ஞானிகள் கருதுகின்றனர். நீராவியின் சக்தியினை ஜேம்ஸ்வாட், ஸ்டீஃபென்சன் போன்றவர்கள் காண, உபயோகிக்க லியோனார்டோவின் ஆராய்ச்சிகள் துணைபுரிந்திருக்கின்றன. இயந்திர நுணுக்கங்கள் பற்றி ஏராளமான ஏடுகளை எழுதி விட்டுச் சென்றிருக்கிறான். ஓவியக் கலைபற்றி அவனுடைய ஆராய்ச்சிகள் ஏராளம்.

ஏதோ ஒரு குறிப்பிட்ட துறையில் மேதைகளைக் காண்பது சாதாரணமான ஒன்று! ஆனால் லியோனார்டோ வேறுபட்ட பல துறைகளிலே ஒப்புயர்வற்ற மேதையாக விளங்கினான். அவனுடைய அறிவின் நுண்மை, சிந்தனையின் ஆழம், கலையுணர்வின் தீட்சண்யம் மனித இனத்தையே பிரமிக்க வைக்கிறது. அவனுடைய மேதா விலாசத்தைக் கண்டு மைக்கலேஞ்சலோ போன்ற கலைஞர்கள் பொறாமைப் பட்டார்கள்; ரஃபயேல் (Raphael) போன்ற கலைஞர்கள் லியோனார்டோவை வழிகாட்டியாகக்கொண்டார்கள். மேதைகளுக்கே இயல்பான கிறுக்குத்தனம் ஏதுமின்றி, எல்லோரிடமும் இன்முகம் காட்டிப் பழகினான் லியோனார்டோ. எண்ணற்ற நண்பர்களையும் ஆதரவாளர்களையும் அவன் பெற்றிருந்தான்.

மாதவி, உலக வரலாற்றில் லியோனார்டோவுக்கு ஒரு சிறப்பான இடம் உண்டு. பிணமலையின்மீது சாம்ராஜ்யத்தைக் கட்டியவர்கள் மட்டுமல்ல; அறிவாலயங்களையும் கலைக் கோயில்களையும் நிர்மாணித்த மேதைகளும் வரலாற்றுப் பெருமையுடையவர்கள். அதைமட்டும் மறந்து விடாதே!

அன்புள்ள.

அகத்தியன்.

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும், மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4—128, மவுண்ட் ரோடு, சென்னை-6, தமிழ்நாடு.